விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 12.04.2021 திங்கட்கிழமை | இதழ் : 133 | பக்கங்கள் : 16






05
மணிவண்ணனன் காவல்படையை உருவாக்கியது சட்டவிரோதம்!



08
வேற்று கிரகத்தில் முதல் விமானப் பறப்பு முயற்சி



12
மியன்மார் படைகளால் ஒரேநாளில் 80இற்கும் மேற்பட்டோர் படுகொலை!



14
சர்ச்சைக்குரிய எண்ணெய் விற்பனை செய்யப்படவில்லை

### பயங்கரவாத செயல்பாடுகளுடன் தொடர்புள்ளதா?

# அரச சார்பற்ற 23 நிறுவனங்கள் மீது சி.ஐ.டி., ரி.ஐ.டி. கடும் விசாரணை

### சட்டத்தைத் திருத்தி தடை செய்வதற்கும் நடவடிக்கை



கொழும்பு, ஏப்ரல் 12

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய 23 அரச சார்பற்ற தேசிய, சர்வதேச நிறுவனங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜெனரல் சட்டத்தரணி ராஜா குணரத்ன தெரிவித்தார். 15

## இலங்கையில் மேலும் 225 பேருக்கு தொற்று

கொழும்பு, ஏப்.12

இலங்கையில் மேலும் 225 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்கள் அனைவரும் கொரோனா நோயாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 95 ஆயிரத்து 43 ஆக அதிகரித்துள்ளது. (எ)



## பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து விமானப்படை வீரர் புதிய சாதனை

கொழும்பு, ஏப்.12

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து இலங்கை விமானப் படை வீரர் ஆசியாவில் புதிய சாதனை படைத்துள்ளார்.

ரொஷான் அபேசுந்தர என்ற வீரரே இவ்வாறு, தலைமன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ்கோடி வரை நீந்திச் சென்று மீண்டும் 15

## 600ஐ நெருங்குகிறது கொரோனா பலி



கொழும்பு, ஏப்.12

நாட்டில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பால் உயிரிழந்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.

இந்நிலையில், இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 598 ஆக அதிகரித்துள்ளது.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 60 வயதான ஆணும், காலி மாவட்டம் பத்தேகமவைச் சேர்ந்த 72 வயது ஆணும் நேற்று உயிரிழந்தனர்.

இதன் மூலம் கொரோனா தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 600 ஐ அண்மித்துள்ளது. (எ)

## யாழ்ப்பாணத்தில் நேற்று 39 பேருக்கு தொற்றுறுதி!

### 6 கடைகளுக்குப் பூட்டு!!

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ். மாவட்டத்தில் 39 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 45 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தை சேர்ந்த 417 பேரின் மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் யாழ். மாவட்டத்தில் ஐவர், மன்னாரில் இருவர், வவுனியாவில் ஒருவர் என 8 பேர் தொற்றாளர்களாக அடையாளம் 15

## நான்கு மாதங்களில் மட்டும் விபத்துகளில் 580 பேர் பலி!

கொழும்பு, ஏப். 12

2021 ஆம் ஆண்டின் கடந்த நான்கு மாதங்களில் மட்டும் வாகன விபத்துக்களில் 580 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டும் ஏற்பட்ட வாகன 15

## சஹ்ரான் குழு உருவாக எமது சமூகமே காரணம்

### மு.கா. தலைவர் ஹக்கீம் காட்டம்



மருதமுனை, ஏப்.12

“எமது உள்விவகாரங்களில் உள்ள விமர்சனங்களைப் பற்றிப் பேசப் போனால் எத்தனை மணித்தியாலங்கள் எடுக்குமோ தெரியாது. கூலிக்கு அமர்த்தப்பட்ட சஹ்ரான் குழு தறுதலைத்தனமாக செய்த செயலையே இந்த நாடு இப்போது 15

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு டக்ளஸின் சிபாரிசில் மன்னிப்பு வழங்க முடியாதா?

### கருணாகரம் எம்.பி. கேள்வி

மட்டக்களப்பு, ஏப்.12

யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிபாரிசின் பேரில் விடுவிக்க முடியுமாக இருந்தால், தமிழ் அரசியல் கைதிகளை ஏன் அவ்வாறு 15

## சந்தைகளிலுள்ள தேங்காய் எண்ணெயை மக்கள் அச்சமின்றி பயன்படுத்த முடியும்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப்.12

உடலுக்கு தீங்கு விளைவிக்கும் தேங்காய் எண்ணெய் சந்தைகளில் இதுவரை கண்டறியப்படவில்லை என சந்தைப் படுத்தல் கூட்டுறவு சேவைகள் சந்தை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (எ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நான்கு...

விபத்துக்களால் ஐவர் மரணமாகினர் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், தமிழ் - சிங்கள புத்தாண்டு நெருங்கி வருகிறது. பரபரப்பான மாத மாகக் காணப்படுகின்றது. இதனால், எதிர்வரும் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அதிகளவான வீதி விபத் துக்கள் ஏற்படக்கூடும் எனவே இது விட யத்தில் பொதுமக்கள் அவதானமாக செயல்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

தவிர, விபத்துக்கள் அதிகரிப்பை தவிர்க்கும் பொருட்டு விசேட சோதனை நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பித் துள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

### அரச சார்பற்ற...

நாட்டில் செயற்பட்டுவரும் குறித்த 23 நிறுவனங்களையும் தடைசெய்வதற்கு 1980 ஆம்ஆண்டு 31 ஆம் இலக்க தன் னார்வ சேவைகள் பதிவு மற்றும் கண் காணிப்பு சட்டத்தின் படி வாய்ப்பு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது

“இந்த அமைப்புக்களை அவசர சட் டத்தின் கீழ் தடை செய்வதற்கு ஏதுவான வாய்ப்புக்கள் உள்ளன. ஆயினும், தற்போது நடைமுறையில் இருக்கும் சட் டத்தில் மாற்றத்தை கொண்டுவந்து இந்த அமைப்புக்களை தடைசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த அமைப்புக்கள், மத, சமூக, சுகாதார மற்றும் சுற்றால் என்ற போர் வையில் மததீவிரவாதத்தை தூண்டும் நடவடிக்கைளை மேற்கொண்டுவரு கின்றன. அத்துடன், இந்த அமைப்புக் களின் ஊடாக சட்டவிரோத நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டடால், 200, 500 ரூபாவே தண்டப்பணமாக காணப் படுகின்றது.

மேலும் நாட்டில் 37 ஆயிரம் அரச சார்பற்ற நிறுவனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ள நிலையில், அதில் 980 நிறு வனங்களினால் இந்த நாட்டிற்கு எந்த பயனும் இல்லை. அதனால், அந்த நிறு வனங்களை தடை செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

அத்துடன் அண்மையில் தடைசெய் யப்பட்ட 11 நிறுவனங்களில் மூன்று நிறுவனங்கள் குறித்த 32 நிறுவனங் களில் உள்ளடங்குகின்றன. இந்நிலை யில் குறித்த தடை செய்யப்பட்டுள்ள முஸ்லீம் அமைப்புக்களின் வங்கிக் கணக்குகளில் இருந்த கோடிக்கணக் கான பணமும் முடக்கப்பட்டுள்ளது. தீவிரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கியமை தொடர்பில் சட்டமா அதிபரினால் 11 அமைப்புக்களுக்கு கடந்த 7ஆம் திகதி தடை விதித்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

### பாக்கு நீரிணையை...

தலைமன்னார் வரை நீந்தி சாதித்துள்ளார்.

இவர், 59.3 கிலோமீற்றர் தூரத்துக்கு நீந்தியுள்ளதுடன், இதற்காக அவருக்கு 28 மணித்தியாலங்கள், 19 நிமிடங்கள் மற்றும் 43 விநாடிகள் நேரம் எடுத்துள் ளது.

பாக்கு நீரிணையைக் கடப்பதற்கான தனது பயணத்தை ரொஷான் அபேசுந்தர நேற்று முன்தினம் சனிக்கிழமை அதி காலை இரண்டு மணியளவில் தலைமன் னார் இறங்குதுறையிலிருந்து ஆரம்பித் தார்.

இந்நிலையில், தமிழகத்தின் தனுஷ் கோடியைச் சென்றடைந்த அவர், அங் கிருந்து மீண்டும் நீந்தி நேற்று அதிகாலை மூன்று மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

இதேவேளை, இதற்குமுன்னர்1975ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆழிக்குமரன் என்றழைக்கப்படும் குமார் ஆனந்தன் பாக்கு நீரிணையை நீந் திக் கடந்து மீளத்திரும்பிய முதல் இலங் கையர் என்ற சாதனையைப் படைத்திருந் தார். (எ)

# வருட இறுதிக்குள் மாகாண சபை தேர்தல்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 12

அரசாங்கம் இந்த வருட இறுதிக்குள் மாகாணசபை தேர்தல்களை நடத்தும் நோக்கத்துடன் உள்ளது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கு அவசிய மான திருத்தங்கள் அதனை நடத்து வதற்கான நடவடிக்கைகளிற்கு நான் ஆதரவை வழங்குவேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கட்சி தலைவர்களின் சந்திப் பில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங் களை முன்னெடுக்க எண்ணியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சியினர் மாகாணசபை தேர்தல் முறை குறித்து ஏதாவது எதிர்ப்பினை வெளி யிட்டால் அவர்கள் அதற்கான மாற்று வழிகளை முன்வைக்கவேண்டும் எனவும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



### சஹ்றான்...

பேசிக்கொண்டிருக்கின்றது. அதே வேளை, எமது சமூகத்தின் செயல்பாடு களால் தான் இந்தக் கும்பல் உருவானது என்பதையும் சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்”

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப் பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள் ளார்.

நாடறிந்த கல்விமானும் முன்னாள் கல்வி அதிகாரியுமான மருதமுனை மர் ஹூம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலா னாவின் கல்வி சமூக சமய அரசியல் மற்றும் கலாசாரப் பணிகளை புதிய தலை முறையினருக்கு கொண்டு சேர்க்கும் வகையில் சட்டத்தரணி றுடானி ஸாஹி ரால் தொகுக்கப்பட்ட அபுல் கலாம் ஐ. எம்.எஸ்.எம்.பழீல் மௌலானா வாழ்வும் பணியும் (1920 - 2013) நூல் மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் வெளி யிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

“கூலிக்கு அமர்த்தப்பட்ட சஹ்றான் குழு எமது சமூகத்தின் செயல்பாடுகளால் தான் உருவானதை சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது உள்விவகாரங்களைப் பற்றிப் பேச வேண்டும். எமது உள்விவ காரங்களில் உள்ள விமர்சனங்களைப் பற்றிப் பேசப் போனால் எத்தனை மணித் தியாலங்கள் எடுக்குமோ தெரியாது. அதா வது, ஏராளமான உள்முரண்பாடுகளு டன் வாழ்ந்து வருகின்றோம். புரிந்துணர் வும் சகிப்புத் தன்மையும் எம்மிடையே இல்லாமல் போவதைக் காண்கின்றோம். இவ்வாறாக தறுதலைத்தனமாக ஒரு கும் பல் செய்த செயலையே இந்த நாடு இப் போது பேசிக்கொண்டிருக்கின்றது. இத னால் முஸ்லிம் சமூகம் தலைகுனியும் நிலை ஏற்பட்டுள்ளது” - என்றார். (எ)

### அமைச்சர்...

விடுவிக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பி னர் கோவிந்தன் கருணாகரம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊட கச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணி வண்ணன், பயங்கரவாதத் தடுப்புப் பிரி வினரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், யாழ். முதல்வர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிபாரிசில் முதல் தடவை மன்னிப்பாக ஜனாதிபதியால் விடுவிக்கப்படுகிறார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு, மீன்பிடித்துறை அமைச் சரின் சிபாரிசில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்த யாழ். மாநகர முதல்வரை விடுதலை செய்ய முடியுமாக இருந்தால், பல ஆண்டுகளாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை இவ்வாறான சிபா ரிசில் மன்னித்து ஏன் விடுதலை செய்ய முடியாது? என அவர் கேள்வியெழுப்பி னார். (எ)

# மே தின நிகழ்வுகளை தனியாக நடத்த சுதந்திரக்கட்சி தீர்மானம்

கொழும்பு, ஏப்ரல் 12

மே தின நிகழ்வுகளை தனியாக நடத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது. கட்சியின் சிரேஸ்ட பிரதிதலைவர் உபுல்ரோகண பியதாச இதனை தெரிவித்துள்ளார்.

கட்சியின் தொழிற்சங்கங்கள் மேதின நிகழ்வுகளை தனியாக முன்னெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏனையவர்களுடன் பேச்சுவார்த்தை களை மேற்கொண்ட பின்னர் இறுதிமுடி வை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித் துள்ளார்.

# தகுதியுடைய குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு!

## அமைச்சர் திலும் அமுனுகம

கொழும்பு, ஏப். 12

தகுதியுடைய குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கும் பணி நாளைக்குள் நிறைவு செய்யப்படும் என நம்புவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் ஊடகங்களுடன் பேசிய போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பொதுமக்கள் சிறிய தாமதங்களை சந்திக்க நேரிடும் என்று ஒப்புக் கொண்டார். ஆனால், கிராம அலு வலர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் மூலம் தகுதியுடைய குடும்பங்களுக்கு கொடுப்பனவை வழங்க ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

“பொதுமக்கள் தேவையின்றி அரசு அலுவலகங்களுக்கு செல்லக்கூடாது. ஏனெனில், அதிகாரிகள் அந்தந்த பகுதி களுக்கு கொடுப்பனவுடன் வருவார்கள். தேவையற்ற முறையில் அரசு அலுவல கங்களுக்குச் சென்று சுகாதார வழிகாட் டுதல்களை மீறவேண்டாம்.

நாட்டில் நிலவும் பிரச்னைகளை கருத்தில் கொண்டு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 நெருக்கடியால் பெரும் பாலான துறைகள் பாதிக்கப்பட்டுள்ள தால், பொதுமக்களுக்கு சிறிது நிவாரணம் வழங்குவதை அரசு நோக்கமாகக் கொண் டுள்ளது” என்றும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டார்.

# மியன்மார் கடற்பரப்பில் கைதான மீனவரை விடுவிக்க வேண்டும்

## இலங்கை அரசாங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 12

மியன்மார் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடித்தமைக்காக கைது செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கை மீனவரை விடுதலை செய்யவேண்டும் என இலங்கை அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைக்கான மியன்மார் தூதுவரை அழைத்து இந்த வேண்டுகோளை விடுத் துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள் ளார்.

இலங்கை மீனவர்களிற்கு நீண்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதால் அவர்களை விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாங்கள் பொதுமன்னிப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள் ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

மியன்மாருக்கான இலங்கை தூதுவரும் இந்த விவகாரத்தை கையாள்கின்றார் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். மார்ச் 12 ஆம் திகதி மியன் மார் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்களிற்கு மியன்மார் நீதிமன்றம் 3 வருட சிறைத்தண்டனையை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணத்தில்...

காணப்பட்டனர். அத்துடன், கிளிநொச்சி தனிமைப்படுத்தல் முகாமை சேர்ந்த 3 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட் டது.

இதேவேளை, யாழ். மாநகரப் பகுதி யில் வர்த்தகர்கள், பணியாளர்கள் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடை யவர்கள் என 431 பேரின் மாதிரிகள் முல்லேரியா ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இவர்களின் பரிசோதனை முடிவு களை நேற்று மாலை வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் நேற்று வெளியிட்டார்.

இதன்படி, வர்த்தகர்கள், பணியா ளர்கள் 22 பேருக்கும், அவர்களுடன் தொடர்புடைய 12 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனால், யாழ். மாவட்டத்தில் நேற்று 39 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேசமயம், தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 6 வர்த்தக நிலையங்களை மறு அறிவித்தல்வரை மூடுவதற்கும் மாகாண சுகாதாரப் பணிப் பாளர் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவண்ணன் கைதும் விடுதலையும் எவ்வாறு நிகழ்ந்தது!

யாழ். மாநகர சபையின் செயற்பாடுகளை செழுமைப்படுத்துவதற்காக மாநகர முதல்வருக்கு இருக்கின்ற அதிகாரங்களுக்கு அமைய எற்படுத்தப்பட்ட நியமனங்கள்தான் விவகாரமாக மாறியிருக்கின்றது.

இது தென்னிலங்கையில் சலசலப்பை ஏற்படுத்தி - விவகாரமாவதற்கு, குறித்த செயற்பாட்டிற்கு நம்மவர்களினால் கொடுக்கப்பட்ட பில்டப் பிரதான வகிபாகம் பண்ணியிருப்பதாகவே தெரிகின்றது.

நியமனம் பெற்றவர்கள் முதல்வர் மணிவண்ணனுடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை வான்புலிகளுடன் பிரபாகரன் எடுத்த படத்துடன் ஒப்பிட்டதும், மோட்டார் சைக்கிளில் போவதை படம் பிடித்து புலிகளின் காவல்துறையின் மோட்டார் சைக்கிள் ரோந்துடன் ஒப்பிட்டதும். வீதிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துகின்ற வீடியோக் காட்சிகளை பதிவேற்றி சமூக ஊடகங்களில் பரவவிட்டு ஆரவாரம் பண்ணியதும் தென்னிலங்கை அரசாங்கமோ பேரினவாத சக்திகளோ இல்லை.

இந்தக் கைங்கரியங்களை எல்லாம் கனகச்சிதமாக செய்தது நம்முடைய ஆர்வக் கோளாறுகள்தான்!

கொடுக்கப்பட்ட பில்டப் இற்கு மணி அணியினரின் ஆசீர்வாதமும் இருந்திருக்கின்றது. கிடைத்த ஒரு வருடத்தினை பயன்படுத்தி சிறந்த நிர்வாகிகள் என்று தம்மை மக்கள் மத்தியில் அடையாளப்படுத்திக் கொள்வது - மணி அகற்றப்பட முடியாதவன் என்பதை செய்திகள் ஊடாக, தூக்கி எறிந்தவர்களுக்கு கரியைப் பூசுவது போன்றவை குறித்த ஆசீர்வாதத்திற்கு காரணமாக இருக்கும்.

சிலுசிலுப்பு தேவையில்லை பலகாரம் தான் முக்கியம் என்று முதல்வர் மணி தரப்பு விசயத்தை நகர்த்தியிருக்கமாயின் இந்தளவிற்கு விவகாரம் விஸ்வரூபம் எடுத்திருக்காது என்பதே பொதுவான சிந்தனை.

ஆக, எம்மவர்களின் பில்டப் தென்னிலங்கையின் கண்களை உறுத்த - சார்ள்ஸ் நிர்மலநாதன் போன்ற மரக்கட்டைகள் அவல் என நினைத்து உரலை இடிக்க, விவகாரம் பொலிஸ் விசாரணை, பயங்கரவாத விசாரணைப் பிரிவின் தலையீடு, மணிவண்ணன் கைது என்று சென்று, இப்போது முதல்வர் மணிவண்ணன் விடுதலை செய்யப்பட்டு விட்டார்.

முதல்வர் மணிவண்ணன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லபட்டுள்ளார் என்ற செய்தி வெளியாகியதும், 24 மணித்தியாலங்களுக்குள் காட்சிகள் மாறும், பிணையில் விடுதலை செய்யப்படுவார் என்று யாரும் நினைக்கவில்லை.

அவ்வாறு நினைத்திருந்தால் மணியை சைக்கிளில் இருந்து கழட்டி வீசியவர்கள் வாயே திறந்திருக்க மாடடார்கள். "குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்த மணிக்கு மணி அடிக்கப்பட்டு விட்டது, அதை வைத்து கொஞ்ச நாளைக்கு அரசியல் பண்ண முடியும்" என்ற எதிர்பார்ப்பே முன்னணியின் கண்டனங்களுக்கு பின்னணி!

ஆனால், யாரும் எதிர்பார்க்காத வகையில், கைது செய்யப்பட்ட அன்றிரவே, வவுனியாவில் இருந்து முதல்வர் மணி அழைத்து வரப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டார்.

இப்போதைய பேசுபொருள், முதல்வர் மணிவண்ணன் விடுதலை செய்யப்பட்டமைக்கு காரணம் யார்?

திருவாளர் சுமந்திரனின் வாத்திறன். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நகர்வு, அமெரிக்க தூாதரகம் போன்ற வெளிச்சக்திகளின் அழுத்தம் என்றெல்லாம் ஒவ்வொரு தளங்களிலும் விவாதம் தொடர்ந்து கொண்டிருப்பததை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

மேற்சொன்ன ஒவ்வொரு தரப்பினரதும் ஆதரவாளர்கள், தமது தரப்பினரே முதல்வர் மணியின் விடுதலைக்கு காரணமானவர்கள் என்று கூறிவருகின்றனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தற்போது தமிழ் மக்கள் மத்தியில் இருக்கின்ற தவிர்க்க முடியாக சட்ட ஆளுமை என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. தென்னிலங்கை நீதிமன்றங்களிலும் அவருக்கு சிறப்பான இடம் இருக்கின்றது.
அவ்வாறான ஒருவர், நீதிமன்றில் ஆஜராகி பிணை விண்ணப்பத்திற்கான நியாயங்களை முன்வைக்கின்றபோது, உளரீதியான தைரியம் நீதவானுக்கு ஏற்படும் என்பது மறுப்பதற்கு இல்லை.

ஆனால் முதல்வர் மணியின் விவகாரத்தில், பிணை விண்ணப்பம் கோருகின்ற சந்தேகநபர், தலைமறைவாக மாட்டார் - வழக்கு தொடுநர் தரப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தமாட்டார் - ஆதாரங்களுக்கு சேதத்தினை ஏற்படுத்த மாட்டார் என்ற நம்பிக்கை கெரளவ நீதவானுக்கு இருக்குமாயின் அவர் பிணையை வழங்க முடியும்.

எனவே, முதல்வர் மணி, நீதிவானுக்கு நன்கு பரீச்சயமானவர் - சட்டத்தரணி (04ஆம் பக்கம் பார்க்க)

**- பன்னீர்செல்வம் சிறிகாந்த்**

# சி.ஐ.ஏ. உளவாளிக்கு 6.5 மில்லியன் டொலர்களை இலங்கை வழங்கியது

## 'வோல்ஸ்ட்ரீட் ஜேர்னல்' வெளியிட்டுள்ள பரபரப்பு தகவல்

**வாஷிங்டன், ஏப். 12**

**அமெரிக்காவில் தன்னை பற்றிய நற்பெயரை உருவாக்குவதற்காக இலங்கை அரசாங்கம் 2014 இல் மத்திய வங்கி ஊடாக அமெரிக்க வர்த்தகர் ஒருவருக்கு 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது என தெரிவித்துள்ள வோல்ஸ்ட் ரீட் ஜேர்னல் அந்த நபர் சி.ஐ.ஏ.யின் உள வாளி எனவும் தெரிவித்துள்ளது.**

இமாட் ஜூபாரி என்பவர் அமெரிக்க அரசாங்கத்திற்கு புலனாய்வு தகவல்களை வழங்குபவராக நீண்ட காலமாக செயற் பட்டு வந்தவர் என சட்ட ஆவணங்கள் மற்றும் அவரை நன்கறிந்தவர்களை மேற்கோள் காட்டி வோல் ஸ்றீட் ஜேர்னலின் பத்திரிகையாளர் பைரன்டாவேர் தெரிவித்துள்ளார்.

இமாட் ஜூபாரியின் செயற்பாடுகள் குறித்து சில குற்றச்சாட்டுகள், அவருடன் இணைந்து பணியாற்றிய சி.ஐ.ஏ. அதிகாரிகளுடன் தொடர்புடையவை என அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர் என வோல்ஸ்ரீட் ஜேர்னல் செய்தி வெளியிட்டுள்ளது.

ஒருமுறை அவர் இலங்கையின் சார்பான திட்டமொன்றினை முன்னெடுப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டார் இதுவே பின்னர் அவருக்கு எதிரான குற்றவியல் குற்றச்சாட்டாக மாறியுள்ளது என வோல்ஸ்ரீட் ஜேர்னல் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சார்பில் அந்த திட்டத்தை பொறுப்பேற்ற பின்னர் ஜூபேரி கடலோர கண்காணிப்பு அமைப்புமுறையொன்றை கொள்வளவுசெய்யுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டார், அதனை பயன்படுத்தி இந்து சமுத்திரத்தின் பெரும்பகுதியை கண்காணிக்க முடியும் என வோல்ஸ்றீட் ஜேர்னல் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் ஜூபேரியிடம் வழங்கிய அதன் பொது மக்களின் வரிப்பணத்தில் 87 வீதத்தினை அவர் தனது தனிப்பட்ட தேவைகளிற்காக செலவிட்டுள்ளார் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நீதிமன்றம் தனது செல்வாக்கை பயன்படுத்தி வெளிநாடு ஒன்றிடமிருந்து பணம் உட்பட நன்மைகளை பெற்ற குற்றச்சாட்டு உட்பட பல குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவருக்கு 12 வருடசிறைத் தண்டனையை வழங்கியுள்ளது.

# சுகாதார வழிகாட்டுதல்களை மீறுவோருக்கு எதிராக நேற்று முதல் விஷேட நடவடிக்கை

கொழும்பு, ஏப்.12

கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்ட பின்னர் பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஒரு விஷேட சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

சுகாதார வழிகாட்டுதல்களை மீறுவதாகக் கண்டறியப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க குறித்த சுற்றறிக்கையின் கீழ், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் விஷேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடைகள், பொதுப் போக்குவரத்து மற்றும் ஏனைய இடங்களை ஆய்வு செய்ய பொலிஸார் பணியில் அமர்த்தப்பட்ட நிலையில், கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க சுகாதார அமைச்சகம் பிறப்பித்த சுகாதார வழிகாட்டுதல்கள் கடுமையாக மீறப்படுவதாக அஜித் ரோஹண தெரிவித்தார்.

பெரும்பாலான மக்கள் முகக்கவசம் அணியவில்லை என்றும் சமூக இடைவெளியைப் பராமரிக்கவில்லை



என்றும் அவர் சாடினார்.

ஹோட்டல் மற்றும் ஏனைய நிறுவனங்கள் சுகாதார வழிகாட்டுதல்களை நெருக்கமாக பின்பற்றவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இதன் விளைவாகவே பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்க சிறப்பு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## மேயர் மணிவண்ணனின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கையும் வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தே காணப்படுகின்றன.

எனவே, மாநகர சுகாதாரம் மற்றும் வாகனப்போக்குவரத்து என்பவற்றை நல்லமுறையில் பராமரிக்கவேண்டிய தேவை யாழ். மாநகரசபைக்கு இருக்கின்றது.

இதன்காரணமாகவே மேயர் மணிவண்ணனால் ஒரு விசேட பாதுகாப்புப்பிரிவு மாநகரசபை எல்லைக்குள் ஒழுங்கான நடைமுறைகளை பேணுவதற்கென அமைக்கப்பட்டிருந்தது.

**புலிச்சாயம்**

ஆயினும், இக்காவல் பிரிவுக்கு புலிச்சாயம் பூசி அதனை முடக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப் புதிய காவல்பிரிவிற்கென வடிவமைக்கப்பட்ட நீலத்திலான சீருடை புலிகளினுடைய காவல் படைக்கு நிகரான சீருடையாக காணப்பட்டிருந்தது.

எனவே, இச்சீருடையே தற்போது சர்ச்சைக்குள்ளாகி வடக்கு-கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரம் கொடுக்கப்பட்டால் அது எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுமென்பதற்கு மாநகர காவல் பிரிவு நல்ல உதாரணமாக இருப்பதாக குறிப்பிட்டு அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேயர் மணிவண்ணனின் நகரகாவல்பிரிவை சாடியுள்ளார்.

ஆனால், இந்த யாழ் மாநகர காவல் பிரிவு முற்றிலும் நகரசபை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதாகவே அமைந்திருந்தது. இருப்பினும், அதற்கும் தற்போது புலிச்சாயம் பூசப்பட்டிருப்பது வடக்கு-கிழக்கு மக்கள் மீதான சந்தேக பார்வை அரசிடமிருந்து முற்றிலுமாக விடுபடவில்லையென்பதையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.




**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.04.2021 திங்கட்கிழமை
சார்வரி, பங்குனி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# மாகாண சபைத் தேர்தலில் இணக்கப்பாடு ஏற்படுமா?

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் விரைவில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடப்படவுள்ளதாக பிரதமர் அலுவலக செய்திகள் கூறுகின்றன. மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்த்தாது, விரைவாக நடத்துமாறு இந்தியா வலியுறுத்திவருகின்றது. அதேவேளை, அண்மையில் இலங்கையின்மீது நிறைவேற்றப்பட்ட புதிய பிரேரணையிலும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இந்த பின்புலத்தில், அண்மைக்காலமாக, மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டுமென்னும் குரல்கள் தெற்கிலும் மேலேழுந்து வருகின்றன. ஆரம்பத்தில் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எதிர்மறையான குரல்கள் தெற்கில் ஒலித்திருந்தபோதிலும்கூட, தற்போது தேர்தலை நடத்தவேண்டுமென்னும் குரல்களே அதிகம் ஒலிக்கின்றன. சரத் வீரசேகரபோன்ற ஒருசிலர் 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படவேண்டுமென்று கூறினாலும்கூட, பொதுஜன பெரமுனவிலிருக்கும் பெரும்பாலானவர்கள் மாகாண சபையை ஆதரிக்கின்றனர். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி வருகின்றார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே, மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் கட்சித் தலைவர்களை பிரதமர் சந்திக்கவுள்ளார் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன. ஆனால், மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கும் கருத்துக்களை பார்த்தால், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் கட்சித் தலைவர்களுக்கு இடையில் இணக்கப்பாட்டை எட்டுவது கடினமென்றே தெரிகின்றது. மாகாண சபைத் தேர்தலை வைக்கவேண்டுமாயின் புதிய முறைமை தொடர்பில் முடிவெடுக்கவேண்டும், அதனை தயாரிக்க வேண்டும், பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெறவேண்டும். இவைகள் அனைத்தையும் உடனடியாக செய்யக்கூடிய நிலைமையில்லை. எனவே, இந்த ஆண்டுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமான ஒன்றல்ல என அவர் தெரிவித்திருக்கின்றார்.

நிலைமைகளை அவதானித்தால், இந்த ஆண்டுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் இருப்பதாகவே தெரிகின்றது. அதேவேளை, புதிய முறைமையின்கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாயின் – அந்த புதிய முறைமையின் கீழ் அனைத்து கட்சிகளையும் இணக்கம்காண வைக்கவேண்டும். அதுவும் இலகுவான விடயமல்ல. புதிய முறைமை தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்திலும் விவாதிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதனை சட்டமாக்க முடியவில்லை. ஆனால், தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மை பலத்துடன் இருப்பதால் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் முரண்பாடுகளை அதிகம் பொருட்படுத்தவேண்டிய தேவையிருக்காது. எனவே, புதிய முறைமையுடன் பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகள் இணங்கிவிட்டால், அதனை மேற்கொள்வதில் சிரமமிருக்காது. ஆனாலும், தற்போது மைத்திரிபால சிறிசேன தொடர்பில் இடம்பெற்றுவரும் சர்ச்சைகளை நோக்கினால், அதிலும் சில இடர்கள் ஏற்படக்கூடும். மேலும், அரசாங்கத்தின் ஏனைய பங்காளிக் கட்சிகளும் புரிந்துணர்வுடன் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த இடத்தில் தமிழர் தரப்பு என்ன செய்யலாம்? இதனை எவ்வாறு கையாளலாம்? உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது எந்த முறைமையின் கீழ் தேர்தல் இடம்பெற்றாலும் வெல்லப்போவது நாங்கள் என்னும் இறுமாப்புடனேயே கூட்டமைப்பிருந்தது. ஆனால், மோசமான தோல்வியை அது சந்தித்தது. அவ்வாறானதொரு நிலைமையே மாகாண சபைத் தேர்தல் விடயத்திலும் இடம்பெறலாம். ஏனெனில், புதிய முறைமையின்கீழ் தேர்தல் இடம்பெறுமாக இருந்தால், மாகாண சபையில் அரசாங்க தரப்பு கட்சிகளும் சிறு கட்சிகளும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு. தமிழர் தரப்புக்கள் அவ்வாறான நிலைமையை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? அதற்கான தந்திரோபாயம் என்ன? வெள்ளம் வருமுன்னே தமிழ் கட்சிகள் அணைகட்டுவது தொடர்பில் சிந்திக்கவேண்டும். வந்த பின்னர், ஐயோ, என்பதில் பயனில்லை.

# மேயர் மணிவண்ணனின் 'மாநகர சீருடை'

- அலசுவது **இராஜதந்திரி** -

**1949**ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது யாழ்ப்பாண மாநகர சபை. மாநகர சபையாக தோற்றம் பெறமுன்னர் நகர சபையாக இருந்த யாழ் மாநகர சபை, திராவிட கட்டிடக்கலையம்சத்தைக்கொண்ட கட்டிடத் தொகுதியில் திறம்பட இயங்கியிருந்தது.

இருந்தபோதிலும், யாழ்ப்பாண கோட்டைக்குள் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் வெளியே வந்து யாழ். மாநகர சபைக் கட்டிடத்துக்குள்ளேயும் புகுந்து விடலாம் எனக்கருதியே தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ். மாநகர சபைக் கட்டிடத்தை தகர்த்திருந்தனர்.

1985ஆம் ஆண்டு யாழ். மாநகரசபை கட்டிடத்தை தகர்த்த தமிழீழ விடுதலைப்புலிகள், அதற்கு முன்பதாக யாழ். மாநகர சபையின் பிரபலம் மிக்க மேயராக இருந்த அல்பிரட் துரையப்பாவை 1975ஆம் ஆண்டு சுட்டுக் கொன்றிருந்தனர்.

**பிரபாகரனின் ஒப்புதல்**

இதுவே, தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முதலாவது அரசியல் கொலையாகும். அத்துடன் இக்கொலையை தனது கையாலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரன் மேற்கொண்டிருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இதனை அவர் அமெரிக்காவின் பிரபல சஞ்சிகையான "ரைம்" சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் ஒப்புக்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அல்பிரட் துரையப்பாவின் மரணத்துடன் யாழ். மாநகர சபை அதன் முக்கியத்துவத்தை வெகுவாக இழந்ததுடன், நீண்ட காலம் மேயர் நிர்வாகம் இல்லாது இயங்கிய மாநகர சபையாகவும் யாழ். மரநகர சபை காணப்பட்டிருந்தது.

அல்பிரட் துரையப்பாவுக்குப்பின்னர் யாழ் மாநகர மேயர்களாக இருந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

**முதல் பெண் மேயர்**

இவர்களில் யாழ். மாநகர சபையின் முதலாவது பெண் மேயரான திருமதி சரோஜினி யோகேஸ்வரனும் அடங்குவார். இவர், தமிழீழ விடுதலைப்புலிகளால் கொழும்பில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனின் மனைவியார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச்சேர்ந்த வெ. யோகேஸ்வரன் அக்கட்சியின் செயலதிபரான அ. அமிர்தலிங்கத்தோடு கொழும்பில் வைத்து படுகொலைசெய்யப்பட்டார்.

இதன்பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த யாழ்ப்பாண மாநகர மேயரான பொன். சிவபாலன் நல்லூரில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகரசபை கட்டிடத் தொகுதியில் புலிகள் நடத்திய குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இதன்பின்னர் யாழ். மாநகரசபை மேயராக இருந்தவரும் பின்னாளில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராகவுமிருந்த என். ரவிராஜ் கொழும்பில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் மேயராக 1962ஆம் ஆண்டு எம். ஏ. எம். எம் சுல்தான் என்ற முஸ்லிம் சமூகத்தவரும் மேயராக இருந்துள்ளார்.

**ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி மேயர்**

யாழ்ப்பாணம் மாநகர சபை நிர்வாகம் மீள ஏற்படுத்தப்பட்ட பின்னர் ஈழமக்கள் ஜனநாயக கட்சியைச்சேர்ந்த யோகேஸ்வரி பற்குணராசா யாழ்ப்பாண மாநகர சபையின் இரண்டாவது பெண் மேயராக நியமனமானார்.

யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகம் மேயர் அல்பிரட் துரையப்பாவின் நிர்வாகம் இடம்பெற்ற காலப்பகுதிவரை சிறப்பான இடத்திலேயே இருந்துவந்தது.

இலங்கையிலுள்ள மாநகர சபைகளில் மிகவும் திறம்பட இயங்கிய ஒரு மாநகர சபையாகவே யாழ்ப்பாண மாநகர சபை விளங்கியிருந்தது.

யாழ்ப்பாண நகரில் திராவிட கலையம்சத்துடன்கூடிய யாழ்ப்பாணம் நவீன சந்தைக் கட்டிடத்தொகுதிகள் மேயர் அலபிரட் துரையப்பாவினுடைய காலப்பகுதியிலேயே நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், யாழ். மாநகர சபையின் வீழ்ச்சி அல்பிரட் துரையப்பாவினுடைய மரணத்தோடு ஆரம்பித்திருந்தது.

யாழ்ப்பாண மாநகரசபை பல ஏற்ற இறக்கங்களை கண்டதாகவே இருக்கின்ற நிலையில் கூடுமானவரை மாநகர சபை நிர்வாகம் மீளவும் வெற்றிகரமாகவே மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

**மேயர் மணிவண்ணன்**

இந்நிலையில் மாநகர சபையின் புதிய பாதுகாப்பு பிரிவு தற்போதைய மேயர் வி. மணிவண்ணனால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


இப் பாதுகாப்பு பிரிவையொத்த பாதுகாப்புச் சேவைகள் கொழும்பு மாநகர சபையிலும் காணப்படுகின்றன.

வாகன நிறுத்தங்களை நிர்வகித்தல், அதற்கான கட்டணங்களை அறவிடுதல் போன்றவை கொழும்பு மாநகர சபையின் பாதுகாப்பு பிரிவின் செயற்பாடாக இருக்கின்றன.

பத்து வருடங்களுக்கு முன்பிருந்தது போலன்றி, யாழ்ப்பாண மாநகர சபை நகர சுகாதாரம், போக்குவரத்து போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், தற்போது யாழ்ப்பாண மாநகர பகுதிக்குள் காணப்படுகின்ற சனத்தொகை அதிகரித்துள்ளது. எனவே, தற்போதைய கொவிட்-19 அச்சுறுத்தல்காரணமாக சுகாதார நிலவரங்களை நன்கு பேண வேண்டியுள்ளது. அத்துடன், யாழ்ப்பாணத்துக்குள் இருக்கின்ற வாகனங்களின் (02ஆம் பக்கம் பார்க்க)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 12 திங்கட்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 30
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 9.30
திதி : பிரதமை



## இன்றைய ராசிபலன்

**12.04.2021**

**மேடம்**
தன்னம்பிக்கையோடு பணிபுரிந்து தடைகளை அகற்றிக் கொள்ள வேண்டிய நாள். வாங்கல்-கொடுக்கல்களில் ஏற்பட்ட குழப்பங்கள் மாறும். பெரிய மனிதர்களின் தொடர்பு கிட்டும்.

**இடபம்**
தொழில் முயற்சிகளில் வெற்றிகிட்டும் நாள். வளர்ச்சிப் பாதையில் செல்ல சிலரின் சந்திப்பு பலன் தரும். அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள்.

**மிதுனம்**
மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள். ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது. பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கடகம்**
சந்தித்தவர்களால் சந்தோஷம் அதிகரிக்கும் நாள். நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள்.பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**சிம்மம்**
எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைப்பீர்கள். வாகனப் பழுதுச் செலவுகளால் கையிருப்புக் கரையலாம்.

**கன்னி**
வளர்ச்சிக்கு வழிகாட்ட நண்பர்கள் முன்வரும் நாள். நேற்றைய சேமிப்பு இன்றைய செலவிற்கு கைகொடுத்து உதவும். உடன் பிறப்புகள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம்.

**துலாம்**
பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும் நாள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். உத்தியோக நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**விருட்சிகம்**
முன்னேற்றம் கூடும் நாள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு**
அலுவலகத்தில் சகபணியாளர்களுடன் விவாதம் செய்ய வேண்டாம். பதவி உயர்வு சம்பந்தமாக மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். உங்களுக்கு வங்கி, அரசாங்கப் பணி கிடைக்கும்.

**மகரம்**
நட்பால் நன்மை கிட்டும் நாள். லட்சியங்களை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பொதுவாழ்வில் பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். புகழ் மிக்கவர்களின் சந்திப்பு உண்டு.

**கும்பம்**
ரியல் எஸ்டேட் துறையில் முன்னேற்றம் உண்டு. பழைய பாக்கி வசூலாகும். உங்கள் மீது யாரும் கோபப்பட முடியாத அளவு நடந்து கொள்வீர்கள். மனக்கவலை குறையும். பணவரவு உண்டு.

**மீனம்**
மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள். தனவரவில் இருந்த தடைகள் அகலும். பழைய வாகனத்தைக் கொடுத்துப் புதிய வாகனம் வாங்குவது பற்றிச் சிந்திப்பீர்கள். தொழில் முன்னேற்றம் உண்டு.

# காங்கிரஸ் வேட்பாளர் மாதவராவ் காலமானார்!



சென்னை, ஏப். 12

தி.மு.க. கூட்டணி சார்பில் விருதுநகர் - ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் மாதவராவ் நேற்று காலமானார்.

வேட்பு மனுத் தாக்கல் செய்தநாள் முதல் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் கடந்த இரு வாரங்களாக அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

ஆனால், சிகிச்சை பலனின்றி அவர் நேற்று காலை காலமானார். அவருக்கு வயது 63. மாதவராவ் மருத்துவமனையில் இருந்தபோது அவருக்கு ஆதரவாக அவரது மகள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவரின் மறைவுக்கு காங்கிரஸ் கட்சி, ஸ்ராலின் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.(ஐ)



## திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக அறிவியுங்கள்!

### கவிஞர் வைரமுத்து கோரிக்கை

சென்னை, ஏப். 12

திருக்குறளை தேசிய நூலாக்க வேண்டும் என்று இந்திய அரசுக்கு கவிஞர் வைரமுத்து கோரிக்கை விடுத்துள்ளார்.

60 திருவள்ளுவர் சிலைகள்

வி.ஜி.பி. உலக தமிழ்சங்கம் சார்பில் வட அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கும் விழா சென்னை அடையாறு எம்.ஜி.ஆர். - ஜானகி மகளிர் கல்லூரி அரங்கத்தில் நடந்தது. விழாவுக்கு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி தலைமை வகித்தார்.

இதில் பேசிய கவிஞர் வைரமுத்து, முத்து, மிளகு, ஏலம், மயில்தோகை என்று ஏற்றுமதி செய்துகொண்டிருந்த தமிழன் இன்று அறிவை ஏற்றுமதி செய்கிறான். வி.ஜி.சந்தோசம் வடித்திருக்கும் திருவள்ளுவர் சிலைகளை அமெரிக்காவின் 50 மாநிலங்களுக்கு வழங்கி நாங்கள் வழியனுப்புகிறோம். இது அமெரிக்க அறிவுலகத்துக்குத் தமிழர்கள் கொடுக்கும் கொடை என்று கொள்ள வேண்டும்.

இந்த நல்ல வேளையில் பிரதமர் நரேந்திர மோடிக்கு நான் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். உலக மேடைகளிளெல்லாம் திருக்குறளை உச்சரிக்கிறீர்கள். அப்போதெல்லாம் உலகத் தமிழர்களின் தோள்கள் ஓரங்குலம் உயர்கின்றன. ஆனால், சொல்லில் மட்டுமே தமிழர்கள் சொக்கி விடமாட்டார்கள். சொல் பித்தளை செயல்தான் தங்கம் என்பார்கள். திருவள்ளுவரை உளமார நேசிக்கும் நீங்கள் திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும்.

திருக்குறள் எந்த மதத்தையும் சார்ந்ததில்லை. திருக்குறள் பொதுநூல். தமிழர் நாகரிகங்களை இந்தியா அறிய, இந்திய நாகரிகத்தை உலகம் அறிய திருக்குறளை தேசிய நூலாக பிரதமர் அறிவிக்க வேண்டும். அது ஓர் இனத்தின் பெருமையை மட்டுமல்ல ஒரு தேசத்தின் பெருமையை உலகுக்கு அறிவிக்கும் - என்றார். (ஐ)

## தி.மு.கவின் வெற்றி உறுதியாகி விட்டது!

### நாஞ்சில் சம்பத் சொல்கிறார்

சென்னை, ஏப். 12

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க தலைமையிலான கூட்டணி கட்சிகள் அமோக வெற்றி பெறும் என கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன. கருணாநிதி பெற்ற வெற்றிகளை தாண்டி தி.மு.க. தலைவர் ஸ்டாலின் வரலாறு படைப்பார். தி.மு.க தலைமையிலான கூட்டணி கட்சிகள் இடையே பிளவு ஏற்படாமல் கூட்டணி கட்சிகளுக்கு தொகுதிகளை சரியான முறையில் பங்கீடு செய்து கொடுத்து ஸ்டாலின் தனது ஆளுமை திறனை நிரூபித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்பே திட்டமிட்டு கிராம சபை கூட்டம், உங்கள் தொகுதியில் ஸ்டாலின் எனப் பல்வேறு கட்டங்களாக பிரசாரம் மேற்கொண்டு எல்லா தொகுதி மக்களையும் சந்தித்து தி.மு.க. தலைமை யிலான கூட்டணி கட்சிகள் வெற்றி பெற வழி வகை செய் தது பாராட்டத் தக்கது. எனவே தி.மு.க வெற்றி உறுதி செய்யப்பட்டு விட்டது.

அ.தி.மு.க தலைமையிலான கூட்டணி தேர்தல் நேரத்திற்கான கூட்டணி. மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா, நான் இனி ஒருபோதும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துக் கொள்ளமாட்டேன் எனக் கூறினார். ஆனால், அவரது பெயரை சொல்லி கட்சியை நடத்து பவர்கள் பா.ஜ.க. வுடன் கூட்டணி வைத்தனர் - என்றார். (ஐ)

## மணிவண்ணன்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

- மாநகர முதல்வர். இந்நிலையில் பிணை பெற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் கனீஸ்ட சட்டத்தரணிகளுள் கனிஸ்ட சட்டத்தரணியாக இருக்கின்ற ஒருவர் பிணை விண்ணப்பம் செய்திருந்தாலே பிணை கிடைத்திருக்கும் என்பதுதான் யாதார்த்தம்.

அடுத்ததாக தற்போதைய அரசாங்கத்தினை தெரிந்தவர்கள் அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக விடுதலை செய்யப்பட்டார் என்ற கருத்தினையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

தற்போதைய அரசாங்கம் அவ்வாறான அழுத்தங்களுக்கு படிந்து தீர்மானங்களை மேற்கொள்ளும் தன்மையுடையதாக இருக்குமாயின் அமெரிக்காவுடன் எம்.சி.சி. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கும். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்தியாவிற்கும் வழங்கப்பட்டிருக்கும். ஜெனீவா பரபரப்பும் நிறைவடைந்துள்ள நிலையில், எம்.சி.சி க்கும் கிழக்கு முனையத்திற்கும் வழங்காத அழுத்தத்தினையா மணிக்காக சர்வதேசம் ஏற்படுத்தப் போகின்றது?! அதுவும் ஒருசில மணித்தியாலங்களில்....?!

முதல்வர் மணி வவுனியாவில் இருந்து அழைத்து வரப்படுகின்றார் - நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படப் போகின்றார் என்ற செய்தி பரவிய சமநேரத்திலேயே, யாழ் மாநகர முதல்வரின் விடுதலை தொடர்பான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செய்தி ஊடகங்களில் வெளியாகியிருந்தது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சொன்னபடியே சம்பவங்களும் நடந்து முடிந்திருக்கின்றன.

இவற்றை வைத்துப் பார்க்கும்போது, சமூக ஊடகங்களினால் ஏற்படுத்தப்பட்ட பில்டப் தென்னிலங்கையில் ஏற்பட்டுத்திய சலசலப்புக்கள்தான் யாழ். முதல்வரின் கைதிற்கு காரணமாக இருந்திருக்கின்றது. எதிர்க்கட்சிகளின் வாயை அடைக்க வேண்டிய தேவையும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் எனக் கருதலாம்.

எனினும், விடயத்தை ஆழமாக ஆராய்ந்தபோது ஜனாதிபதிக்கு ஏற்பட்ட புரிதலும், ”அரசாங்கத்திற்கு வில்லங்கத்தினை ஏற்படுத்தக்ககூடிய விடயங்களில் டக்கி தலை போடாது” என்ற ராஜபக்ஷக்களின் ஆழமான நம்பிக்கையும் மணியின் விடுதலையை சாத்தியமாக்கி இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொரோனா கட்டுப்பாடுகள் பருத்தித்துறையில் தீவிரம்!

வடமராட்சி, ஏப். 12

கொரேனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பருத்தித்துறையில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

புதுவருடத்தை ஒட்டி தற்போது வியாபார நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனால், பொது மக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் கடைகள், சந்தைப் பகுதிகளில் கொரோனா தடுப்பு சுகாதார விதிகள் பின்பற்றப்படுவதை கண்காணிக்க சுகாதாரப் பரிசோதகர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பருத்தித்துறை, மந்திகை, மானாண்டி சந்தைகள் உட்பட வர்த்தக நிலையங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

முகக்கவசம் அணியாது வியாபாரம் செய்யும் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்ய வரும் வர்த்தகர்களும் பொதுமக்களும் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுவதோடு கொரோனா கட்டுப்பாட்டை மீறும் வர்த்தக நிலையங்கள் மூடப்படுவதோடு சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், தற்போதயை கொரோனா பரவல் அபாயத்தை முன்னிட்டு பருத்தித்துறையில் சினிமா திரையரங்கையும் மூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வலி. தென்மேற்கில் 12 வீதிகளை ‘காப்பெற்’றாக மாற்ற உள்ளீர்ப்பு

நவாலி, ஏப். 12

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட 12 வீதிகளை காப்பெற்றாக மாற்றுவதற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டே இந்த வீதிகள் காப்பெற்றாக மாற்றப்படவுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் இ. அங்கஜன் முன்மொழிந்த இந்த வீதிகளின் விபரங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் எஸ். ராதகிருஷ்ணனால் வலி. தென்மேற்கு பிரதே சபை தவிசாளர் அ. ஜெபநேசனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சங்கானை ஆஸ்பத்திரி வீதி, சில்லாலை லூர்து மாதா வீதி, பண்டத்தரிப்பு அம்மன் வீதி, பிரான்பற்று 4ஆம் குறுக்குத் தெரு, அமிர்தலிங்கம் வீதி, மாதகல் நாவலர் வீதி, இளவாலை உடையார் வீதி, மாரீசன்கூடல் வீதி, கட்டுடை வீதி, மானிப்பாய் மெமோறியல் வீதி, ஆனைக்கோட்டை யூனியன் வீதி, சுதுமலை மூனாமலை வீதி, மானிப்பாய் ஆனந்தா வீதி என்பன காப்பெற் வீதிகளாக மாற்றம் செய்யப்படவுள்ளன. இதற்கான மதிப்பீடுகளை பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# மணிவண்ணன் காவல்படையை உருவாக்கியது சட்டவிரோதம்!

### வடக்கு அவைத்தலைவர் சீ. வீ. கே.

யாழ்ப்பாணம், ஏப்.12

**யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனால் காவல்படை உருவாக்கப்பட்டது சட்டவிரோதமானது என்று தெரிவித்துள்ளார் வட மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.**

யாழ். மாநகர சபையின் ஆணையளராக நீண்ட காலம் பணியாற்றிய சீ.வீ.கே. சிவஞானம் முதல்வர் மணிவண்ணன் உருவாக்கிய காவல்படை குறித்து இணையம் ஒன்றுக்கு அளித்த கருத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபையினால் உருவாக்கப்பட்ட ஆளணி, மாநகர சபை வாகன நிறுத்துமிடங்களில் பணம் அறவிடவே மாத்திரமே. ஆனால், யாழ் மாநகரசபை உருவாக்கியது



தண்டப்பணம் அறவிட. மாநகரசபையினால் தண்டப்பணம் அறவிட முடியாது - என்றும் கூறினார். (ஐ)

## சமூக தலைவர்களுக்கு மதிப்பளித்தல் நிகழ்வு!

நவாலி, ஏப். 12

சமூக அபிவிருத்தி, தமிழுக்கு தொண்டாற்றியவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் மதியம் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தந்தை செல்வா ஞாபகார்த்தமாக முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்வு தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஸ்தாபக தலைவர் க. தளையரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்கள் எம். ஏ. சுமந்திரன், சி. சிறிதரன், த. சித்தார்த்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

கொரோனா தடுப்பு சுகாதார விதிகளை அனுசரித்து இடம்பெறும் இந்த நிகழ்வில், 52 பேருக்கு கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் சி. மகேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ)



## வலி. வடக்கில் திருட்டுகளில் ஈடுபட்டு வந்த இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 12

வலி. வடக்கில் ஒன்றரை வருடங்களாக திருட்டில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து 15 நீரிறைக்கும் மோட்டர்கள், வாகன சுத்திகரிப்புக்குப் பயன்படுத்தப்படும் மோட்டர், புல்வெட்டும் இயந்திரம் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை, தெல்லிப்பளை ஆகிய இடங்களைச் சேர்ந்த இந்த நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கடந்த ஒன்றரை வருடங்களாக இந்தத் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரிய வந்ததாகக் கூறப்பட்டது.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த ஹொட்டகச்சியின் வழிகாட்டலில் தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காவற்துறை பரிசோதகர் மெர்சான் இந்துக்கலா சில்வா மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஆனந்த சுமணசிறி தலைமையிலான பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். குற்றச் சந்தேக நபர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரசால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களின் தொழிலாளர்களுக்கும் 1000 ரூபா வேண்டும்

### வடிவேல் சுரேஷ் வலியுறுத்து

கொழும்பு,ஏப்.12

முதலாளிமார் சம்மேளனத்தால் நிர்வகிக்கப்படும் பெருந்தோட்டங்கள் மாத்திரமின்றி அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் பெருந்தோட்டங்களில் தொழில்புரியும் சகல தொழிலாளர்களுக்கும் 1000 ரூபாய் நாளாந்த சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

குறிப்பாக நிரந்தர தொழிலாளர்களுக்கு மாத்திரமின்றி ஏனைய தொழிலாளர்களுக்கும் 1000 ரூபாய் நாளாந்த சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வலியுறுத்தினார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 900 ரூபாய் அடிப்படைச் சம்பளம், 100 ரூபாய் வாழ்க்கைச் செலவு புள்ளிக்கான கொடுப்பனவு என்ற அடிப்படையில் 1000 ரூபாய் நாளாந்த சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு கம்பனிகள் நீதிமன்றத்தை நாடியிருந்த போதிலும், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையால் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப செயல்பட வேண்டிய நிர்ப்பந்தம் கம்பனிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விடயங்கள் தொடர்பில் போதிய தெளிவற்றவர்களின் அறிவிப்புக்களால் கம்பனிகள் பயன்பெற்று வருகின்றன. ஆயிரம் ரூபாய் நாளாந்த சம்பளம் என்பது சகல தொழிலாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்றே வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், சில கம்பனிகள் நிரந்தர தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் நாளாந்த சம்பளத்தையும் ஏனையவர்களுக்கு 700 ரூபாய் நாளாந்த சம்பளத்தையும் வழங்கியுள்ளன. இதேவேளை, அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் சில பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு இம்முறையும் 1000 ரூபாய் நாளாந்த சம்பளம் வழங்கப்படாமல் இருக்கின்றது. இந்த நிலைமை கவலையக்குரியது- என்றார். (எ)

## காரைநகர் இந்துக் கல்லூரிக்கு மீண்டும் பெயரை மாற்ற முயற்சி!

நவாலி, ஏப். 12

காரைநகர் இந்துக் கல்லூரியை கலாநிதி தியாகராஜா ஞாபகார்த்த இந்துக் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்து தேசிய பாடசாலையாக விரைவில் தரம் உயர்த்துமாறு பொது அமைப்புகளும், மக்களும் வலியுறுத்துகின்றனர் என்று காரைநகர் பிரதேச சபையின் தவிசாரளர் வி. கேதீஸ்வரதாஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், “எமது பிரதேசத்தின் வளர்ச்சி - அபிவிருத்திக்கு மட்டுமன்றி இந்நாட்டில் வளமிகு தேசம் ஒன்று உருவாக வேண்டும் எனும் தூர நோக்கில் சிந்தித்து பல முன்னோக்க அபிவிருத்தி வேலைகளை. கல்வி அபிவிருத்தி திட்டங்களை முன்னிறுத்தி சாதனை படைத்து மறைந்தவர் கலாநிதி ஆ. தியாகராஜா.

பல முன்னோக்க கல்வியலாளர்களின் உயாந்த சிந்தனையில் உருவாக்கப்பட்டு நீண்ட காலமாக பெயர்பெற்று விளங்கிய காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் தூர நோக்கற்ற சிலரால் காரைநகர் இந்துக் கல்லூரி என பெயர் மாற்றப்பட்டது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசி மீண்டும் கலாநிதி தியகராஜா ஞாபகார்த்த இந்துக் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலியே பயிரை மேயும் அவலம்!

# முல்லைத்தீவில் கிராம சேவகரே கிரவல் அகழ்வில் ஈடுபடுகிறார்!

ஒட்டுசுட்டான், ஏப். 12

**முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிர தேச செயலர் பிரிவில் கருவேலன்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் மானுருவி பகுதியில் அனு மதிப்பத்திரம் அற்ற காணி ஒன்றில் சட்டவிரோதமாக கிராம அலுவலர் ஒருவரால் கிரவல் அகழ்ந்து குவிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்களால் குற் றஞ்சாட்டப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் எந்தத் திணைக்களங்களும் நடவ டிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத் தில் இயற்கை வளங்கள் அப கரிப்பு - அழிப்பு என்பன அண் மைக்காலமாக அதிகரித்து வரு கின்றது. இந்நிலையில், அரச அதிகாரி ஒருவரே இவ்வாறான சட்டவிரோத செயலை மேற் கொண்டு வருகின்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில், கருவேலங்கண்டல் கிராம அலு வலரை தொடர்பு கொண்டு கேட்டபோது அயல் கிராம அலுவலரே இந்தக் காணியில் மணல் அகழ்வை மேற்கொள் கிறார் என்றும், இது குறித்து தன்னிடம் எந்த அனுமதியும் பெறப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் குறித்த காணிக்கு இதுவரை ஆவணங்களும் வழங் கப்படவில்லை என்றும் சொன் னார்.

இது தொடர்பில், ஒட்டு சுட்டான் பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அப்பகுதியில் கிரவல் அகழ்வுக்கு தாம் அனுமதி வழங்கவில்லை என்று அவர் கூறினார்.

இந்நிலையில், குறித்த அரச அதிகாரி மீது நடவடிக்கை எடுப்பது அவசியம் என்று அப் பகுதி மக்களும், இயற்கை ஆர் வலர்களும் கோரிக்கைகளை வி டுத்துள்ளனர். (ஐ)

## 'மன்னல்' நூலுக்கான ஆக்கங்கள் கோரல்!

மன்னார், ஏப். 12

மன்னார் பிரதேச செயலகத் தின் 2021 ஆண்டுக்கான கலா சார விழா ஜூன் மாதம் இடம் பெறவுள்ள நிலையில் ஆண்டு தோறும் மன்னார் மாவட்டத் தின் சிறப்பை எடுத்துரைக்கும் விதமாக உருவாக்கப்படும் "மன்னல்" பிரதேச மலர் இம் முறையும் வெளியிடப்பட வுள் ளது.

இதற்காக மன்னாரை சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், மற்றும் சமூக ஆர்வலர்களின் ஆக்கங்கள் கோரப்படுகின்றன. அவை, மன்னார் மாவட்டத் தின் சிறப்பையும் கலாசார பண் பாட்டு அம்சங்களையும் எடுத்து கூறக்கூடிய ஆக்கங்களாகவும், நடு நிலை தன்மை உடையதாக வும் அமைதல் வேண்டும்.

ஆக்கங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் மன்னார் பிரதேச செயலகத்தில் நேரடி யாகவோ அல்லது கலாசார உத் தியோகஸ்தர், பிரதேச செயலகம், மன்னார் எனும் முக வரிக்கோ அல்லது abimahathy18@gmail.com எனும் மின்னஞ்சல் முகவ ரிக்கோ அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)

## 80 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

வவுனியா, ஏப். 12

வவுனியா நகரில் முகக் கவ சம் அணியாத 80 பேருக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

புத்தாண்டு நெருங்கி வரும் நிலையில் வவுனியா நகரில் பொலி ஸாரும் சுகாதாரப் பிரிவினரும் இணைந்து விசேட நடவடிக் கையில் நேற்று முன்தினம் ஈடு பட்டனர்.

இதன்போது, வவுனியா நகருக் குள் பொருள் கொள்வனவுக் காக முகக் கவசமின்றி வந்த 80 பேருக்கு எதிராகவே இவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. (ஐ)

## பஸ்ஸில் கஞ்சா கடத்த முயற்சி கிளிநொச்சியில் ஒருவர் கைது!



கிளிநொச்சி, ஏப். 12

கிளிநொச்சியில் பஸ்ஸில் கஞ்சா கடத்த முற்பட்ட ஒரு வரை நேற்று பிற்பகல் தாம் கைது செய்துள்ளனர் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், அவரிடமிருந்து ஒரு கிலோகிராம் கஞ்சா கைப் பற்றப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படை யினருக்குக் கிடைத்த தகவல் களின் அடிப்படையில் வைத்தி யசாலைக்கு முன்பாக உள்ள பஸ் நிலையத்தில் வைத்தே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு, கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார். (ஐ)



## வவுனியாவில் இரத்த தான முகாம்!

வவுனியா, ஏப். 12

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற குருதிதான முகாமில் பெரு மளவான இளைஞர்கள் பங்கேற்று இரத்த தானம் செய்தனர்.

இந்த இரத்த தான முகாம், மருக்காரம்பளை கிராம அலுவ லர் பிரிவில் சமயபுரம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடை பெற்றது.

மருக்காரம்பளை கிராம அலு வலர் நா.ஸ்ரீதரனின் ஏற்பாட் டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமதாசன் பிரதம விருந்தின ராக கலந்து கொண்டிருந்தார்.

இந்த இரத்த தான முகாம் சமயபுரம் கிராம அபிவிருத்தி சங்கம், மணிப்புரம் கிராம அபி விருத்தி சங்கம், இளங்கோ விளையாட்டு கழகம், அகில இலங்கை சைவத்தமிழ் மன்றம், பாக்கியம் அறக்கட்டளை, சுயா தீன தமிழ் இளைஞர்கள்ஆகிய பொது அமைப்புக்களின் பங் களிப்புடன் சிறப்பாக நடை பெற்றது

இதில் பங்குபற்றிய குருதி கொடையாளர்களுக்கு "மனித நேய மாண்பாளர்" பட்டம் வழங்கி சிறப்பு சான்றிதழும் வழங்கப்பட்டது. (ஐ)

## தெற்கு - வடக்கு ஊடகவியலாளர் நேற்று நட்புறவு கலந்துரையாடல்!

கிளிநொச்சி, ஏப். 12

இலங்கை இளம் ஊடகவிய லாளர்கள் சங்கத்தினரும் கிளி நொச்சி ஊடகவியலாளர் சங்கத் தினரும் நேற்று நட்புறவு சந்திப் பில் ஈடுபட்டனர். கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று இந்த சந்திப்பு இடம்பெற்றது.



இதன்போது, தமிழ் - சிங்கள ஊடகவியலாளர்களுக்கு இடை யிலான நட்புறவை அதிகரித் தல், ஊடகத் தொழில்துறைசார் விடயங்களை மேம்படுத்தல், இன நல்லிணக்கத்தை மேம் படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப் பட்டன.

இதன்போது, இளம் ஊட கவியலாளர்களுக்கு 2ஆம் மொழி அறிவை மேம்படுத்தல், தமிழ், சிங்கள, இஸ்லாமிய ஊடகவிய லாளர்களை தெற்கு, வடக்கு மற் றும்கிழக்கு உள்ளிட்ட பகுதிகளுக் குச் சென்று நட்புறவை வளர்த் தல், தமிழ் - சிங்கள மக்களின் அடிப்படை பிரச்னைகளை அடையாளம் கண்டு, இரு தரப்பி னருக்குமான உண்மை நிலையை தெளிவுபடுத்தி, நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் உள்ளிட்ட திட்டங் கள் ஆராயப்பட்டு, அவற்றை நடைமுறைப் படுத்தவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெ டுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, பெண் ஊடக வியலாளர்களின் தொழிற்றுறை சார் சவால்களை அடையாளம் கண்டு, அவர்களையும் ஊடகத் துறையில் செயல்படுத்துவதற் கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் தீர்மானம் எட்டப்பட்டது.

அரசியல், இனப் பிரச்னை களைக் கடந்து, இன, மத ரீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, அதன் ஊடாக நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியுமெனவும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர் பில் ஊடகவியலாளர்கள் மத்தி யில் புரிந்துணர்வு மற்றும் நல் லிணக்கத்தை ஏற்படுத்தவதன் ஊடாக நாட்டில் அனைத்து இனங்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்காக அத்திபாரத்தை ஊடகவியலாளர்கள் மத்தியி லிருந்து ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வெளிக்கொணரப் பட்டது. (ஐ)

## அம்புலன்ஸ் சேவை வழங்குமாறு மகப்பேற்று தாய்மார் கோரிக்கை!

முல்லைத்தீவு, ஏப். 12

மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மகப்பேறுக்காக அனுப்பப்படும் பெண்களுக்கு அம்புலன்ஸ் சேவை வழங்கப்படுவதில்லை என்று மக்களால் கூறப்படுகின்றது.

இந்த அம்புலன்ஸ் சேவை வழங்கப்படாமையால், மகப்பேறுக் காக தாய்மார் பஸ்ஸிலோ அல்லது வாடகை வாகனங்களிலோ பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. தற்போதைய தொற்று நெருக்கடி நிலையில் பஸ்ஸில் பயணிப்பது அச்சம் நிறைந்த தாக உள்ள அதேநேரம், அவர்கள் பஸ்ஸில் பயணிப்பதும் கடும் சிர மங்கள் நிறைந்ததாகவும் உள்ளது.

இந்நிலையில், வாடகைக்கு வாகனங்களை அமர்த்தும்போது அதிக தொகை கேட்பதால் சாதாரண, ஏழை மக்களால் அதனை வழங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு செல்லும் மகப்பேற்று தாய்மார் அதிகமாக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கே அனுப்பப்படுகின்றனர்.

இதனால், அங்கிருந்து மகப்பேற்று தாய்மாருக்கு அம்புலன்ஸ் சேவையை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழந்த, அங்கவீனமுற்ற படையினருக்கு கொடுப்பனவு!

## பாதுகாப்பு செயலர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 12

அங்கவீனமுற்ற மற்றும் உயிரிழந்த இராணுவத்தினரின் மனைவிமாருக்கு கொடுப்பன வுகளை வழங்குமாறு வலியு றுத்தி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டிய அவசியம் கிடையாது என்று தெரிவித் துள்ள பாதுகாப்பு செயலாளர், அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந் துள்ளன என்றும் கூறினார்.

அங்கவீனமுற்ற மற்றும் உயிரிழந்த இராணுவத்தினரின் மனைவிமார் பாதுகாப்பு அமைச்சின் கட்டட வளாகத் தில் அண்மையில் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் கணவனை இழந்தவர்கள் தமது கணவ னுக்கு 55 வயது நிறைவடைந்த பின்னர் வழங்கப்படும் ஓய்வூதி யக் கொடுப்பனவிற்கு பதிலாக சம்பளத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை நிறை வேற்றுவது இலகுவானதல்ல. எனினும் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவுடன் கலந்துரை யாடி, சுமார் ஒரு வருட முயற் சியின் பின்னர் அவர்களின் கோரிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்துள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஒற்றையாட்சி முறைமைக்கு பாதிப்பு ஏற்படுவதற்கு ஒருபோதும் இடமளியோம்!

## விமல் வீரவன்ஸ திட்டவட்டம்

அநுராதபுரம், ஏப். 12

**நாட்டின் ஒற்றையாட்சி முறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது. இஸ் லாமிய அடிப்படைவாதத்தால் ஏற்பட்டுள்ள சவால் களை வெற்றி கொள்ள அரசாங்கம் பொறுப்புடன் செயல்படுகிறது. அரசாங்கத்தின் இலக்கை திசை திருப்பப் பல குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்திற்கு எதி ராக முன்வைக்கப்படுகின்றன.**



- இவ்வாறு கூறியிருக்கிறார் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

அநுராதபுரத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஆட்சி அதிகா ரத்தை கைப்பற்றி குறுகிய காலத்தில் அரசாங்கம் பல சவால்களை எதிர்க் கொண்டுள் ளது. இஸ்லாமிய அடிப்படை வாதத்தால் ஏற்பட்ட சவால் களை அரசாங்கம் சிறந்த முறை யில் வெற்றிக் கொண்டுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தில் இஸ் லாமிய அடிப்படைவாதம் அரச ஆதரவுடன் எழுச்சிப் பெற்றது.

ஜெனிவா விவகாரம் அர சாங்கத்திற்கு பெரும் சவாலாக காணப்பட்டது. சர்வதேசத்தில் மண்டியிடாமல் இராணுவததி னரை அரசாங்கம் பாதுகாத்துள் ளது. ஜெனிவா விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் ஏற்படும் சவால் களை வெற்றிக்கொள்ள அர சாங்கம் உரிய நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வின் பாராளுமன்ற உறுப்புரிமை பறிபோனதை அரசாங்கத்தின் சூழ்ச்சி என எதிர்தரப்பினர் குறிப்பிட்டுக் கொண்டு பாரா ளுமன்றில் முறையற்ற வகை யில் செயல்பட்டார்கள். வெற் றிடமான பாராளுமன்ற உறுப் பினராக ஐக்கிய மக்கள் சக்தி யின் உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டதும் எதிர்க்கட் சியினர் அமைதியடைந்து விட் டார்கள்.

அரசாங்கத்தை அவமதித்த குற்றச்சாட்டில் முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிறை செல்ல வில்லை. நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காகவே அவர் சிறை சென்றுள்ளார் என்பதை எதிர் தரப் பினர் விளங்கிக் கொள்ளவேண் டும். ரஞ்சன் ராமநாயக்கவின் விவகாரத்துக்கு அரசியல் ரீதி யில் இனியொருபோதும் தீர்வு காண முடியாது. என்றார். (ஐ)

# மைத்திரி, மஹிந்த சந்தித்து பேச்சு!

கொழும்பு, ஏப். 12

முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகி யோர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடந்தது.

இந்த சந்திப்பில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால, அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் துமிந்த திஸ நாயக்க ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்ட னர்.

# உள்ளூராட்சி உறுப்பினர்களிடம் உறுதிமொழி; ஐ.தே.க. நடவடிக்கைக்கு ஐ.ம.ச. கண்டனம்

கொழும்பு,ஏப்.12

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயல்பட விரும் பும் உள்ளூராட்சி உறுப்பினர் களிடம் ஐக்கிய தேசியக் கட்சி உறுதிமொழியைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதை கண் டிக்கின்றோம். இது குறித்த உறுப்பினர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர், பாரா ளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார அறிக்கை யொன்றை வெளியிட்டு இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் களுக்கு கடிதமொன்றை அனுப்பி அவர்களிடம் உறுதி மொழியை பெற்றுக்கொள்ள முன்னெடுக்கப்படும் முயற்சி யானது குறித்த உறுப்பினர்க ளின் அடிப்படை உரிமையை மீறும் செயல்பாடாகும்.

இரு தசாப்தங்களுக்கும் அதிக காலம் ஆட்சியைக் கைப் பற்ற முடியாத நிலைக்கு கட்சியை பலவீனப்படுத்திய தலைமைத்துவம் தொடர்பில் சோர்வடைந்த ஆதரவாளர்கள் கட்சி முழுமையாக மாற்ற மடைய வேண்டும் என்ப தையே எதிர்பார்த்தனர்.

எனினும் அதற்கு வாய்ப்ப ளிக்காமல் ராஜபக்ஷக்களுடன் இரகசிய கூட்டணியமைத்து கட்சியையும் ஆதரவாளர்க ளையும் ஏமாற்றியமைக்கான பிரதிபலன் பாராளுமன்றத் தேர்தலில் கிடைக்கப் பெற்றது. முதலாவது பாராளுமன்றத் திலிருந்து உறுப்பினர்களைக் கொண்டிருந்த கட்சி தற்போ தைய பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தைக் கூட பெற்றுக் கொள்ளவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயல்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர் மானத்துக்கு அமைய உருவாக் கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி குறுகிய காலத்துக்குள் பாராளு மன்றத்தில் எதிர்க்கட்சியாகியுள் ளது. இந்த வெற்றி காரணமாக எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக உள்ளூ ராட்சி உறுப்பினர்கள் பலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர்.

இதனைத் தடுப்பதற்காக உறுதி மொழி எடுக்க முற்படல் போன்ற மேலாதிக்கமான ஜன நாயகத்துக்கு முரணான செயல் பாடுகளில் ஈடுபடும் ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை.

உறுப்பினர் பதவி நீக்கப் படும் அல்லது கட்சி உறுப் புரிமை இரத்துச் செய்யப்படும் என்ற அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாத உள்ளூராட்சி உறுப்பினர்களிடம் உறுதி மொழி எடுத்து அவர்களை அச்சப்படுத்தும் செயல் பாட்டை நாம் கண்டிக்கின் றோம். ஐக்கிய மக்கள் சக்தியு டன் இணைந்து செயல்படு கின்ற சகல உறுப்பினர்களுக் காகவும் எமது கட்சி முன் னிலை வகித்து செயல்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# மாணவியின் அங்கங்களை தொட்டு ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர் கைது!

கொழும்பு, ஏப். 12

14 வயது மாணவியின் உடல் அங்கங்களை தொட்டு ஆங்கில பாடம் கற்பித்த ஆசிரியர் ஒரு வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் பிரபல பாடசாலை ஒன்றின் ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணவிக்கு உடல் அங்கங் களை தொட்டு ஆங்கிலம் கற் பித்த ஆசிரியர், பின்னர் அறை ஒன்றில் இருக்கும் புத்தகம் ஒன்றை எடுத்து வருமாறு பணித்துள்ளார்.

மாணவி புத்தகத்தை எடுப் பதற்காக உள்ளே சென்றபோது அவரும் உள்ளே சென்று மாண வியை துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளார். அவரிடம் இருந்து தப்பித்த மாணவி இந்த விடயத்தை தனது பெற்றோ ருக்கு தெரியப்படுத்தினர்.

இதையடுத்து, பெற்றோர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய அந்த ஆசிரியரை பொலிஸார் கைது செய்துள் ளனர். (ஐ)

## உலகளாவிய போராட்டத்தில்

# இலங்கைக்கு சகல உதவியும் வழங்குவதற்கு இந்தியா தயார்

கொழும்பு,ஏப்.12

கொரோனா வைரஸ் பர வலுக்கு முகங்கொடுப்பதற் கான உலகளாவிய போராட் டத்தின் போது, முன்னின்று அனைத்து உதவிகளையும் வழங்குவதற்குத் தயாராக இருப் பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

அண்மையில் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப் புமருந்து தொடர்பில் எழுப்பப் பட்டுவரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இலங் கைக்கான இந்திய உயர்ஸ் தானிகராலயத்தின் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிராக ஒன்றிணைந்து போராடும் கடப்பாட்டின் கீழ் 85 நாடுக ளுக்கும் ஐக்கிய நாடுகள் சுகா தாரப் பணியாளர்கள் மற்றும் அமைதிகாக்கும் படையின ருக்கும் இந்தியா கடந்த வெள் ளிக்கிழமை 64.51 மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துகளை வழங்கியது.

இதன்கீழான தடுப்புமருந் துகள் கடந்த வாரம் ஆசிய, பசு பிக் மற்றும் தென் அமெரிக்க பிராந்தியங்களிலுள்ள நாடுகளி டம் கையளிக்கப்பட்டன. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 1.2 மில்லியனுக்கும் அதிக அஸ்ட்ராசெனேகா தடுப்பும ருந்து கடந்த ஜனவரி, பெப்ர வரி மற்றும் மார்ச் மாதங்களில் இலங்கையை வந்தடைந்தன.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பரவலுக்கு முகங் கொடுப்பதற்கான உலகளாவிய போராட்டத்தின் போது, முன் னின்று அனைத்து உதவிக ளையும் வழங்குவதற்கு இந் தியா தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

# கடலில் மிதந்த பானத்தை அருந்திய இரண்டாவது நபரும் உயிரிழந்தார்!

தென்மராட்சி, ஏப். 12

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் கடலில் மிதந்து வந்த மதுபானப் போத் தலின் திரவத்தை அருந்திய மேலும் ஒருவர் உயிரிழந்தார்.

குடமியன், கொடிகாமத் தைச் சேர்ந்த சின்னத்தம்பி இரா மேஸ்வரன் (வயது 41) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

உயிரிழந்த நபர் தனியாக வசித்து வந்த நிலையில் நேற்று வீட்டின் உட்பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு மரண விசாரணை அதிகாரி வருகை தந்து விசாரணையை மேற் கொண்டு சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை பிரேத அறை யில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது.

பிரேத பரிசோதனையில் அதிக மது போதையே மர ணத்திற்கு காரணம் என தெரி விக்கப்பட்டுள்ளது.


நேற்றுக் காலை நாகர் கோவிலைச் சேர்ந்த ஒருவர் குறித்த மதுபானப் போத்தலின் திரவத்தை அருந்திய நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தி யசாலையில் உயிரிழந்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்று கிரகத்தில் முதல் விமானப் பறப்பு முயற்சி

## ரைட் சகோதரர்களின் சரித்திர சாதனையை ஒத்த ஒரு நிகழ்வு

● குமாரதாஸன்



**வே**ற்றுக்கிரகம் ஒன்றில் மனிதனது முதலாவது வான்பறப்பு இந்த வாரத்தில் இடம்பெறவிருக் கிறது. அறிவியலால் சாதிக்கப்படுகின்ற அந்த உணர்வு பூர்வமான காட்சியைக் காண்பதற்காக முழு உலகமுமே காத்திருக்கிறது.

120 ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் ரைட் சகோதரர்கள் (Wilbur and Orville Wright) நிகழ்த்திய முதலாவது பறப்பு முயற்சிக்கு நிகரான ஒரு பெரும் அறிவியல் பாய்ச்சலாகப் பதிவாகப் போகின்ற சரித்திர நிகழ்வு அது.

மர்மங்கள் நிறைந்ததும் மனிதனது அடுத்த குடியேற்றம் (Martian colony) என்றும் நம்பப்படுகின்ற செவ்வாய்க் கோள், நாளாந்தம் வருகின்ற செய்திகள் ஊடாக மனிதனுக்கு மிகவும் நெருக்க மான அடுத்த வீடுபோல மாறி வருகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்கா - பிரான்ஸ் நாடுகளின் அறிவியலாளர் களது முயற்சியால் நாசா அனுப்பிய Perseverance விண்கலம் சிவப்புக் கிரகத்தின் பல முகங்களை உலகிற்கு அம்பலமாக்கி வருகிறது. படங்களாக, ஒலிப்பதிவுகளாக நாளாந்தம் தகவல்களை அது பூமிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது.

ஏழு மாதங்கள் 292 மில்லியன் மைல்கள் தூரம் பயணம் செய்த ரோபோ விண் கலம் கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கியது.

அதில் பொருத்தப்பட்டிருக்கின்ற அதி நவீன கமெராக் கள் அபூர்வமான பல காட்சிகளை அனுப்பி வருகின்றன. செவ்வாயில் தினசரி என்ன நடக்கிறது என்பதைக் கூட பூமியில் இருந்தவாறு அவதானிக்க முடிகின்றது. அங்கு பல அரிய செயல்களைப் புரிந்து வருகின்ற Perseverance ரோவர் விண்கலத்துடன் இணைக்கப்பட்ட சிறிய புத்திக் கூர்மை கொண்ட மினி ஹெலிக்கொப்ரரின் பெயர்தான் Ingenuity.

இரண்டு கிலோவுக்கு குறைந்த எடை.

ஆனால், அதன் நூண்ணறிவோ மிகை.

செவ்வாயின் அடர்த்தி குறைந்த வளி மண்டலத்தில் பறக்கப்போகின்ற முத லாவது விமானம் அது. இது வரை நாளும் தாய்க் கலத்துடன் இணைக்கப்பட்டிருந்த

ஹெலி பரீட்சார்த்தப் பறப்பு முயற்சியில் ஈடுபடுவதற்காக கடந்த 4ஆம் திகதி முதல் Perseverance விண் கலத்தை விட்டு விலகி செவ்வாயின் தரையில் தனியே கால்பதித்து நிற்கின்றது.



அது தனது இயக்கத்துக்கான சக்தியை இதுவரை ரோவர் கலத்தின் அணு மின் பற்றரிகளில் (nuclear-powered system) இருந்து பெற்றுவந்தது. இனிமேல் தனது சூரிய மின்கலம் மூலம் சேமிக்கப்படு கின்ற சக்தியில் (solar- power) தனித்து இயங்கும் என்று நாசா விஞ்ஞா னிகள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாயில் நிலவும் கடும் குளிர் காரணமாக ஹெலி யின் பறப்பு முயற்சி ஏப்ரல் 8ஆம் திகதியில் இருந்து 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக நாசாவின் ஹெலிக்கொப்ரர் திட்டத்தின் தலைமைப் பொறியி யலாளர் பொப் பலராம் (Bob Balaram) தெரிவித்திருக்கி றார். காலநிலையும் தொழில் நுட்ப செயற்பாடுகளும் சரிவர அமைந்தால் ஞாயிற்றுக்கிழமை ஹெலி பறப்பது நிச்சயம்.

பூமியைப் போலன்றி செவ்வாயில் இரவு நேரத்தில் கடும் குளிர் மைனஸ் -130 பாகை வரை குறைகிறது.

Ingenuity ஹெலி அதன் சக்தி மூலம் முதலில் தன்னைத் தானே கடும் குளிரில் இருந்து காத்துக் கொள்ளவேண்டும். அதற்கான வெப்பமூட்டும் செயல் பாடுகள் சரிவர இயங்குகின்றனவா என்பது தற்சமயம் பரிசோதிக்கப் பட்டு வருகின்றது. அதன் கருவிகளும்வெப்ப அளவீடுகளும் சரிபார்க்கப்பட்டபின் பரீட்சார்த்தப் பறப்பு தொடங்கும்.

கடும் குளிர் மிகுந்த இரவுகளை ஹெலிதனித்து வெற்றிகரமாகக் கடந்துள்ளது.

அதுவே அதன் முதலாவது வெற்றி என்று நாசாவின் செவ்வாய்ப் பறப்புத் திட்டக் குழு தெரிவித்துள்ளது.

செவ்வாயில் ஜெஸீரோ கிரேட்டர் (Jezero Crater) எனப்படுகின்ற ஆற்றுப் பள்ளத் தாக்கு போன்ற பகுதியில் ஹெலி தனது முதல் பறப்பை மேற் கொள்ளவிருக்கும் சுற்றுப் பாதையின் வரைபடத்தை நாசா வெளியிட் டுள்ளது. சுமார் 30 செக்கன்கள் மட்டுமே நீடிக்க உள்ள பரீட்சார்த்தப் பறப்பின் போது ஹெலி சுமார் மூன்று மீற்றர்கள் உயரத்தில் பறக்கும். அதன் பிறகு அடுத்த முப்பது நாட்கள் அதன் பறப்பு உயரமும் தூரமும் அதிகரிக்கப் படும்.

பூமியைப் போலன்றி செவ்வாயின் வான் மண்டலம் காற்று அடர்த்தி குறைந்தது.

எனவே அங்கு பறப்பில் ஈடுபடுகின்றஹெலியின் இரட்டைத் தகடு (twin blades) விசிறிகள் நிமிடத்துக்கு இரண்டாயிரத்து400 தடவை (2,400 rotation) சுழலும் வேகம் கொண்டவை.

முழு உலகமும் ஆவலுடன் காத்திருக்கி ன்ற Ingenuity ஹெலியின் முதலாவது பறப்பை Perseverance விண்கலம் படம்

எடுத்து மறுநாள் பூமிக்கு அனுப்பிவைக்க வுள்ளது. ஹெலி பறக்கும் காட்சியை நேரலையில் காண்பதற்கான வசதிக ளுடன் உலகெங்கும் அறிவியலாளர்கள் காத் திருக்கிறார்கள்.

செவ்வாய்க்கிரகத்துக்கு மனிதர்கள் மேற் கொள்ள ஆசைப்படுகின்ற எதிர்காலப் பயணங்களுக்கெல்லாம் ஒரு தொடக் கமாக இந்த நாட்கள் வரலாற்றில் எழுதப் படவுள்ளன.

1903 ஆம் ஆண்டு ரைட் சகோதரர்கள் (Wright Brothers) என அறியப்பட்ட அமெரிக்க இரட்டையர்கள் வடக்கு கரோலினாவில் மேற்கொண்ட முதலா வது விமானப் பறப்பு முயற்சியே இன் றைக்கு உலகில் பறக்கின்ற எல்லா வானூர்திகளுக்குமான ஆரம்பமாக அமைந்தது. பூமியில் புரியப்பட்ட அந்த அறிவியல் சாதனையை நூற்றாண்டு களுக்குப் பிறகு மனிதன் பூமிக்கு வெளியே வேற்றுக் கிரகம் ஒன்றில் முதல் முதலாகச் சோதித்துப் பார்க்கின்ற நிகழ்வுதான் செவ் வாய்ப் பறப்பு.

ரைட் சகோதரர்கள் கரோலினாவில் தங்களது பறப்பு முயற்சிக்குப் பயன்படுத் திய முதலாவது விமானத்தின் உடற்பாக ங்களில் இருந்து எடுக்கப்பட்ட சிறிய முத் திரை அளவான ஒரு துண்டு (small piece) செவ்வாயில் தரையிறங்கி உள்ள புத்திக் கூர்மைக் ஹெலிக்கொப்ரரில் பொருத்தப்பட்டுள்ளது.

ரைட் சகோதரர்கள் தங்களது பறப்பு முயற்சிக ளுக்குப் பயன்படுத்திய விமா னங்களைக் காட்சிப்படுத்தி பேணி வரு கின்ற ஓஹியோவில் உள்ள அருங்காட் சியகம் ஒன்று "Flyer 1" எனப்படுகின்ற முதலாவது விமானத்தின் சிறிய பகுதி ஒன்றை ரைட் சகோதரர்களது குடும்ப வாரிசுகளினது சம்மதத்துடன் தங்களுக்கு வழங்கியது என்ற புதிய தகவலை நாசா வெளியிட் டிருக்கிறது.

மனித குலத்தின் இரண்டு பெரும் பறப்பு முயற்சிக ளிடையிலான வரலாறு இதன் மூலம் தொடர்பு படுத்தப்படுகிறது.

படங்கள் : ரைட் சகோதரர்களது முதல் விமானம் (1903) "நாசாவின் Ingenuity ஹெலி(2021).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய அனுமதியின்றி லட்சத்தீவு அருகே பயிற்சி நடத்திய அமெரிக்க கடற்படை

● ராகவேந்திர ராவ்

அமெரிக்கக் கடற்படைக் கப்பல் ஜோன் பால் ஜோன்ஸ் (டி.டி.ஜி 53), லட்சத்தீவுகளுக்கு மேற்கே 130 கடல் மைல் தொலைவில் உள்ள இந்தியாவின் பிரத்யேகப் பொருளாதார மண்டலத்தில் ஒரு பயிற்சியை இந்த வாரம் மேற்கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி ஏப்ரல் 7 ஆம் திகதி நடந்ததாகவும் இந்தியாவிடம் முன் அனுமதி பெறாமல் நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் அமெரிக்கக் கடற்படையின் ஏழாவது படைத்தொகுதியால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதை நடத்துவதற்குத் தனக்கு உரிமையும் சுதந்தரமும் உண்டு என்றும் அமெரிக்க தரப்பு கூறுகிறது.

ஏழாவது படைத் தொகுதி என்பது, அமெரிக்கக் கடற்படையின் மிகப் பெரிய படையாகும். மேற்கு பசுபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதிகள் இதன் பொறுப்பில் அடங்கும்.

சர்வதேச சட்டத்தின் படியே இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டதாக ஏழாவது படைத் தொகுதியின் அதிகாரப் பூர்வ அறிக்கை தெரிவிக்கிறது. இந்தியாவின் சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லது துணைக்கண்டப்பகுதியில் இராணுவப்பயிற்சி அல்லது போர்ப்பயிற்சிக்கான அனுமதி பெறப்படவேண்டும் என்று சர்வதேச சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. போக்குவரத்துச் செயல்பாட்டு உரிமைப்படி, சர்வதேச சட்டத்தின் படி, உரிமை, சுதந்தரம் மற்றும் கடலின் சட்டப்படியான பயன்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் ஆதிக்கத்துக்குச் சவால் விடுவதாகவும் உள்ளது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

அமெரிக்கக் கடற்படை தினந்தோறும், இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் தனது செயல்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் அனைத்தும் சர்வதேச சட்டத்துக்கு உட்பட்டே இருப்பதாகவும் ஏழாவது படைத் தொகுதி கூறியுள்ளது. சர்வதேச சட்டம் அனுமதிக்கும் அனைத்து இடங்களிலும் அமெரிக்க விமானங்கள் பறக்கும், கப்பல்கள் மிதக்கும் பயிற்சிகள் நடக்கும் என்றும் கூறியுள்ளது.

அமெரிக்கா, விதிமுறைகளுக்கு உட்பட்டு சாதாரணமாக இந்த ஃப்ரீடம் ஒப் நேவிகேஷன் ஒப்பரேஷனை நடத்தி வருகிறது என்றும் இது முன்னரும் நடந்தது, இனியும் நடக்கும் என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது. 'ஃப்ரீடம் ஒவ் நேவிகேஷன் ஆபரேஷன், என்பது எந்த ஒரு நாடு சம்பந்தப்பட்டதோ அல்லது அரசியல் கருத்து தெரிவிக்கவோ அல்ல என்றும் அது விளக்கமளிக்கிறது.

**இந்தியாவின் அனுமதியின்றி அந்நிய நாட்டுக் கப்பல் வரலாமா?**

ஃப்ரீடம் ஆஃப் நேவிகேஷன் (போக்குவரத்து சுதந்தரம்) சர்வதேச சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சட்டத்தில் பல நிபந்தனைகள் உள்ளன. குறிப்பாக, இந்தியாவின் பிரத்யேகப் பொருளாதார மண்டலப் பகுதியில், அதன் அனுமதியின்றி அந்நிய நாட்டுக் கப்பல் வரலாமா என்பது தான் இப்போது சர்ச்சையாகியுள்ளது.

சர்வதேச சட்டத்தின் கீழ் தனக்கு இந்த உரிமை இருப்பதாகவும் ஆனால் இந்தியாவின் கடல்சார் சட்டம் இதை அனுமதிக்கவில்லை என்றும் அமெரிக்கா கூறுகிறது.

எந்தவொரு வெளிநாட்டுக் கப்பலும் தன் அனுமதியின்றி இந்தியாவின் பிரத்யேகப் பொருளாதார மண்டலம் வழியாகச் செல்ல முடியாது என்று இந்தியா கூறுகிறது.

**இந்தியாவின் கருத்து**

இந்திய வெளியுறவு அமைச்சகம் இந்த விவகாரத்திற்கு எதிர்வினையாற்றியுள்ளது. "சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும் துணைக்கண்டப் பிராந்தியத்திலும் பிற நாடுகள் இராணுவ, ஆயுதப் பயிற்சி, குறிப்பாக, கடலோர நாட்டின் அனுமதியின்றி ஆயுதங்கள் அல்லது வெடிபொருட்கள் பயன்படுத்தும் பயிற்சியை மேற்கொள்ள கடல்சார் சட்டம் குறித்த ஐக்கிய நாடுகளின் சட்டம் அதிகாரம் அளிக்கவில்லை என்பதே இந்தியாவின் நிலைப்பாடு" என்று இந்தியாவின் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

வெளியுறவு அமைச்சகம், "யு.எஸ்.எஸ். ஜான் பால் ஜோன்ஸ் தொடர்ந்து பாரசீக வளைகுடாவிலிருந்து மலாக்கா ஜலசந்தி நோக்கி கண்காணிக்கப்பட்டு வந்தது. அமெரிக்க அரசாங்கத்திற்கு நாங்கள் இராஜதந்திர ரீதியாக இது குறித்த எங்கள் கவலையைத் தெரிவித்துள்ளோம்." என்றும் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

இந்தியக் கடற்படையின் ஓய்வுபெற்ற கொமடோர் சி. உதய பாஸ்கர், சொஸைட்டி ஃபார் பப்லிக் ஸ்டடீஸ்-ன் இயக்குநராகப் பொறுப்பு வகிக்கிறார். அவர், "ஐ.நாவின் கடல் சார் சட்டம் குறித்து இந்தியாவும் அமெரிக்காவும் வெவ்வேறு விளக்கங்களை மேற்கோள் காட்டுகின்றன. இந்தப் பயிற்சியின் போது அமெரிக்கா துப்பாக்கிச் சூடு நடத்தியதா என்பதை நாம் பார்க்க வேண்டும், ஏனெனில் இந்தப் பயிற்சியின் தன்மையை இது பாதித்திருக்கக்கூடும்." என்று கூறுகிறார்.

"பயிற்சிக்கு முன்னர், எந்த நாட்டின் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் வழியாகச் செல்லவேண்டுமோ அந்த நாட்டுக்குத் தகவல் கொடுக்கும் நடைமுறை ஒன்று உள்ளது. அதன் பெயர் 'இன்னொசன்ட் பாசேஜ்' என்பதாகும். இதன்படி, பயிற்சியின் போது, துப்பாக்கிச்சூடு நடத்தப்படுவதானால், நோட்டிஸ் டு மரைனர்ஸ் என்ற நோட்டிஸ் வழங்கப்படவேண்டும்" என்று உதய பாஸ்கர் கூறுகிறார்.

"இவற்றில் எது இப்போது நடந்துள்ளது என்று சொல்வது கடினம், ஏனென்றால் துப்பாக்கிச் சூடு நடந்திருந்தால், அது இந்தப் பயிற்சியின் தன்மையையே மாற்றியிருக்கக்கூடும்." என்றும் அவர் கூறுகிறார்.

"இந்தியாவும் அமெரிக்காவும் ஐ.நா.,வின் கடல் சார் சட்டத்திற்கு வழங்கும் விளக்கங்கள் வெவ்வேறானவையாக இருப்பது தான் இதன் மையப்புள்ளி. இதில் அமெரிக்காவின் நிலை சற்று விசித்திரமாகத் தான் இருக்கிறது. இந்த ஐ.நாவின் கடல் சார் சட்டத்தை அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை. இந்நிலையில், அனைத்து விதிமுறைகளையும் தான் பின்பற்றியுள்ளதாக அது வலியுறுத்துகிறது. இது தான் புரியவில்லை." என்று அவர் கூறுகிறார்.



**சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பது என்ன?**

எந்த ஒரு நாட்டின் கடலோரப் பகுதியிலிருந்தும், 200 கடல் மைல்கள் அதாவது 370 கி.மீ. தொலைவு வரை அந்த நாட்டின் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஆகும்.

அமெரிக்க கடற்படையின் ஏழாவது படைத் தொகுதி ஏப்ரல் 7ஆம் திகதி மாலத்தீவின் கடல் எல்லை மற்றும் பிரத்தியேக பொருளாதார மண்டலம் வழியாகச் சென்றது.

இந்தியாவும் அமெரிக்காவும் நெருங்கிய நட்பு நாடுகளாக இருப்பதாலும், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கைத் தடுக்க ஒன்றிணைந்து செயல்படுவதாலும், இந்த நிகழ்வு நிச்சயமாக இந்தியாவுக்கு அதிர்ச்சியை அளிப்பதாகவே இருக்கும்.

இரு நாடுகளும் குவாட் குழுமத்தின் உறுப்பினர்களாக உள்ளன, இதன் முக்கிய நோக்கம் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கைத் தடுப்பதாகும். இந்தப் பின்னணியில், இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்ட விதம் மற்றும் அது குறித்த அறிவிப்பு வெளியான விதம் இவற்றை இந்தியா புறந்தள்ள முடியாது என்பது தான் உண்மை

**எழுப்பப்படும் கேள்விகள்**

இந்தியக் கடற்படையின் முன்னாள் கடற்படைத் தலைவர் அருண் பிரகாஷ், 1995இல் ஐக்கிய நாடுகளின் கடல் சட்டத்தை இந்தியா அங்கீகரித்துள்ள நிலையில் அமெரிக்கா இன்று வரை அதைச் செய்யத் தவறிவிட்டது என்பது முரண்பாடானது என்று ட்வீட் செய்துள்ளார்.

ஏழாவது படைத் தொகுதி நமது நாட்டின் சட்டத்தை மீறி இந்தியப் பொருளாதாரப் பகுதியில் ஊடுருவி இந்தப் பயிற்சியை மேற்கொண்டதே ஒரு மோசமான விஷயம். இதை இவர்கள் பெருமையாக அறிவிப்பது ஆச்சரியம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென் சீனக் கடலில் அமெரிக்கக் கப்பல்களால் மேற்கொள்ளப்பட்ட ஃப்ரீடம் ஒவ் நேவிகேஷன் ஒப்ரேஷன், (அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பது வேறு விஷயம்) தென் சீனக் கடலைச் சுற்றியுள்ள பிரத்யேகப் பொருளாதார மண்டலம் ஒரு அளவுக்கு அதிகமான உரிமை கோரல் என்ற செய்தியை சீனாவுக்கு வழங்கியது. இந்தியாவுக்கு ஏழாவது படைத் தொகுதி கூற விரும்பும் செய்தி என்ன? என்று அருண் பிரகாஷ் கேள்வி எழுப்புகிறார்.

**ஏழாவது படைத் தொகுதி என்பது என்ன?**

இது அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த முன்னணிப் படைத் தொகுதியாகும். எந்த நேரத்திலும், இதில், 50 முதல் 70 கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள், 150 விமானங்கள் மற்றும் 20,000 கடற்படை வீரர்கள் தயாராக இருப்பார்கள்.

இந்தப் படைத் தொகுதி, கடற்படையின் ஃப்ளாக் அதிகாரியால் மூன்று நிலைகளில் கட்டளையிடப்படுகிறது.

இந்த ஏழாவது படைத் தொகுதியின் செயல்பாடு, 124 மில்லியன் சதுர கிலோமீற்றருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்டுள்ளது, இது சர்வதேச டேட்லைன் முதல் இந்தோ-பாகிஸ்தான் எல்லை வரையிலும், வடக்கில் குரில் தீவுகள் முதல் தெற்கில் அண்டார்டிக் வரையிலும் நீண்டுள்ளது.

ஏழாவது படைத் தொகுதியின் செயல்பாட்டு பகுதி 36 நாடுகளை உள்ளடக்கியது மற்றும் உலக மக்கள் தொகையில் 50 சதவீதத்தை உள்ளடக்கியது. ஏழாவது படைத் தொகுதி, இந்தோ பசிபிக் பகுதியில் 75 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது இருப்பை நிலைநிறுத்தி வருகிறது.

பி.பி.சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி** 38

**2013 - 13**

02B. தரப்பட்ட கவிதை தொடர்பிலான விடைகளைத் தெரிவு செய்தல்.

பார்த்ததும் நல்ல ஆசையை உண்டாக்கும்
கண்களைச் சிமிட்டும் தலையை ஆட்டும்
அம்மா சந்தையிலிருந்து கொண்டுவந்த

பொம்மையைக் கொண்டு வந்தவர் யார்?
எங்கிருந்து கொண்டு வந்தார் என்று கேட்டால்

அம்மா சந்தையிலிருந்து கொண்டுவந்த

என்ற வரியிலிருந்து அம்மாதான் சந்தையிலிருந்து கொண்டு வந்தார் என்பது புலனாகிறது.

எனவே சரியான விடை - 1

**2013 - 14**

பொம்மையினது இரு இயல்புகள்

கண்களைச் சிமிட்டும் தலையை ஆட்டும்

என்ற வரியிலிருந்து தலையை ஆட்டுதல் கண்களைச் சிமிட்டுதல் என்பது புலனாகிறது.

எனவே சரியான விடை - 2

**2013 - 15**

தரப்பட்ட பொம்மையின் அழகு மிஞ்சிச் செல்லதைக் காண முடிகிறது. எனவே இக்கவிதை யின் கருப் பொம்மையின் அழகு பற்றியதாகும்.

எனவே சரியான விடை - 3

**2018 - 09**

தரப்பட்ட கவிதை வருமாறு

மனதில் உறுதி வேண்டும்
உடலில் வலிமை வேண்டும்
சோம்பலை விலக்கிட வேண்டும்
நாட்டுக்கு உழைக்க வேண்டும்

இக் கவிதை சொல்லும் முக்கிய செய்தி
என்பதன் மூலம் நாட்டிற்கு பெறுமதியுடயவனாகுக என்பதாகும்.

எனவே சரியான விடை- 3

**2018- 10**

நாட்டுக்காக உழைக்கும் ஒருவரிடம் இருக்கத்தகக இரு இயல்புகள்
மனதில் உறுதியும் வேலையில் சோம்பலின்மையும்
என்பதைக் குறிக்கும்
கவிதை வரிகள்

மனதில் உறுதி வேண்டும்
சோம்பலை விலக்கிட வேண்டும்

எனவே சரியான விடை - 1

**2018 - 27**

A - கடைப்பிடித்து நடந்திடின்
B - சத்தியந் தான் வென்றிடும்
C - காந்தி சொன்ன வழிகளைக்

மேலே கவிதை வரிகள் ஒழுங்கின்றி உள்ளது. மீள் ஒழுங்காக்கும் போது

C - காந்தி சொன்ன வழிகளைக்
A - கடைப்பிடித்து நடந்திடின்
D - சாந்தி எங்கும் நிலவிடும்
B - சத்தியந் தான் வென்றிடும்

எனவே சரியான விடை - 2

**2019 - 09**

சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்

இக் கவிதை சொல்லும் முக்கிய செய்தி
சுத்தம் பேணுதல் வேண்டும் இதனை விளக்கும் கவிதை வரி

சுத்த முள்ள இடமெங்கும்

எனவே சரியான விடை - 1

**2019 - 10**

கவிதையிலுள்ள கருத்துக்களை ஒழுங்காக்கின்

சுத்தம் இருந்தால் சுகம் இருக்கும்
சுத்தத்தைப் பேணுதல்
சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும்.

எனவே சரியான விடை- 3

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# இலங்கையில் சிறுபான்மையினத்தவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் அலைனா அறிவுரை



கொழும்பு,ஏப்.12

**இலங்கையில் மனித உரிமைகள் நிலை குறித்து கவலைகள் எழுந்துள்ளன. ஆட்சி முறையின் ஜனநாயகப் பண்புகளை நிலை நாட்டி, சட்டத்தின் ஆட்சியை மதிப்பதோடு சிறுபான்மையின சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்றும் இலங்கை அரசாங்கங்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன என்றும் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் அலைனா பி.டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அல்லது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான நீதிப் பொறிமுறையொன்றை ஸ்தாபித்தல் போன்ற வாக்குறுதிகளும் இன்னமும் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், இலங்கையின் மனித உரிமைகள் பற்றிய ஏனைய கவலைகள் எழுந்துள்ளன. ஆட்சிமுறையின் ஜனநாயகப் பண்புகளை நிலைநாட்டி, சட்டத்தின் ஆட்சியை மதிப்பதோடு சிறுபான்மையின சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். தெற்காசியாவின் மிகப் பழைய ஜனநாயக தேசத்தின் ஜனநாயக நண்பன் என்ற வகையில் அமெரிக்கா இலங்கையிடத்தில் இந்த விடயங்களை எதிர் பார்க்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# இலங்கை - இந்தியா இடையே ‘எயர் பபுள்’ விமான சேவை

டில்லி,ஏப்.12

இரு நாடுகளுக்கிடையில் சிறப்பு சர்வதேச பயணிகள் விமானங்களை இயக்க இலங்கையுடன் இருதரப்பு ‘எயர் பபுள்’ விமான சேவையை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கிடையேயான இந்த ஒப்பந்தத்தின் கீழ், சிறப்பு சர்வதேச பயணிகள் விமானங்களை தங்களது விமான நிறுவனங்கள் எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தக்கூடிய நிலைமைகளின் கீழ் இயக்க முடியும்.

இலங்கை மாத்திரமன்றி ஆப்கானிஸ்தான், பஹ்ரைன், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, ஈராக், ஜப்பான், மாலைதீவு, நைஜீரியா, கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 28 நாடுகளுடன் இந்தியா தற்சயம் அத்தகைய ஒப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பில் இந்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தனது ருவிட்டர் பதிவில்:



இந்தியா இலங்கையுடன் எயர் பபுள் விமான சேவை ஒப்பந்தத்தை இறுதி செய்துள்ளது, இது சார்க் பிராந்தியத்தில் இதுபோன்ற 6 ஆவது ஏற்பாடாகவும், மொத்தம் 28 ஆவது இடமாகவும் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக 2020 மார்ச் 23 முதல் இந்தியாவில் திட்டமிடப்பட்ட சர்வதேச விமானங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

எனினும் சிறப்பு சர்வதேச பயணிகள் விமானங்கள் கடந்த ஆண்டு மே முதல் வந்தே பாரத் மிஷனின் கீழ் மற்றும் ஜூலை முதல் இருதரப்பு ‘எயர் பபுள்’ ஏற்பாடுகளின் கீழ் இயங்கி வருகின்றன என்று குறிப்பிட்டுள்ளது. (எ)

# மாவட்டம் தோறும் மாற்றுத்திறனாளிகள் காப்பகம் உருவாக்கப்படல் வேண்டும்

மாவட்டம் தோறும் மாற்றுத் திறனாளிகள் காப்பகம் வேண்டும் என்பது உட்பட மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தியும், பாதிக்கப்பட்டோர் குறித்த கொள்கை உருவாக்கம் என்பவற்றை வலியுறுத்தியும் தமிழ் மாற்றுத்திறாளிகள் அமைப்பினால் பாதிக்கப்பட்டோர் சார்பாக ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு மட்டக்களப்பில் நடைபெற்றது.

மாவட்டம் தோறும் மாற்றுத்திறனாளிகள் காப்பகம் உருவாக்கப்பட வேண்டும் என்பது உட்பட மூன்று கோரிக்கைகள் வலியுறுத்தியும் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டோர் குறித்த கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் ஓர் விழிப்புணர்வு செயற்பாட்டை முன்னெடுக்கப்போவதாக மாற்றுத்திறனாளிகள் தெரிவித்தனர்.

DATA தமிழ் மாற்றுத்திறாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றும் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் DATA அமைப்பின் இயக்குனர் க. ஜீவராசா மட்டக்களப்பு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளின் சம்மேளன தலைவர் து.அரிதாஸ் சம்மேளன ஆலோசகர் சோ.புவிராசசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை பரிமாறினார்கள் இந்த சந்திப்பில் ச.அருள்மொழியும் (இயக்குநர் DATA) கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உள்விவகாரத்தில் எம்மால் தலையிட முடியாது

## சினோபார்ம் சர்ச்சை குறித்து சீனா

கொழும்பு,ஏப்.12

**சினோபார்ம் கொரோனா தடுப்பூசி விடயத்தில் தீர்மானம் எடுக்க வேண்டியது இலங்கையே. உள்ளக விவகாரத்தில் எம்மால் தலையீடு செய்யமுடியாது என்று இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.**

இலங்கைக்கு ஆறு இலட்சம் சினோபார்ம் கொரோனா தடுப்பூசிகளை சீனா வழங்கியிருந்தது. இதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்திலும், வெளியிடங்களிலும் வெளிப்படுத்திய எதிர்ப்பு காரணமாக, இலங்கை சுகாதார அதிகாரிகள் உறுதிப்படுத்தும் வரையில் சினோபார்ம் யாருக்கும் வழங்கப்படாது என்றும் இலங்கையிலுள்ள சீனப் பிரஜைகளுக்கு மட்டும் வழங்கப்படும் என்றும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்திருந்தார்.

சினோபார்ம் தடுப்பூசி அவசரகால பயன்பாட்டுக்காக உலக சுகாதார அமைப்பு ஒப்புதலளிக்கும் வரை இலங்கையர்களுக்கு அது பயன்படுத்தப்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நாட்டுக்கு ஏற்கனவே கொண்டுவரப்பட்ட சினோபார்ம் தடுப்பூசியானது தடுப்பூசியின் பாதுகாப்பு செயல்திறன், தரம் தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஊடாக முறையான அனுமதியளிக்கப்படும் வரை அத்தடுப்பூசியைப் பயன்படுத்துவதை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா ஊடாக இந்த மனு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசியை பொதுமக்களுக்கு பயன்படுத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை குறித்த தடுப்பூசி தொடர்பில் ஆராய நியமித்த நிபுணர் குழுவின் விவரங்களையும் தடுப்பூசி தொடர்பில் கோரிய விடயங்களையும் வெளிப்படுத்த பிரதிவாதிகளுக்கு உத்தரவிட வேண்டும் எனவும் அம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

எனினும் கொழும்பிலுள்ள அனைத்து சீனப் பிரஜைகளுக்கும் சினோபார்ம் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இந்நிலையில், சீனத் தூதரகத்தின் ஊடகப் பேச்சாளரும், அரசியல் பிரிவுத் தலைவருமான லு சொங் தெரிவிக்கையில்:

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரிலேயே சீன அரசாங்கமும், பொது மக்களும் 6 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளனர்.

இந்தத் தடுப்பூசியை யாருக்கு, எங்கு எப்படி வழங்க வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும். அது இலங்கையின் உள்ளக விவகாரமாகும். அதில் சீனா ஒருபோதும் தலையிடப்போவதில்லை.

மேலும், இலங்கையில் தங்கியுள்ள மூன்று முதல் நான்கு ஆயிரம் வரையிலான சீனர்கள் அந்தத் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அதேநேரம் சீனா இதுவரையில் தனது நட்பு நாடுகளுக்காக 133.8 மில்லியன் கொரோனா தடுப்பூசிகளை வழங்கியுள்ளது- என்றார். (எ)



# நேற்று மீளத் திறக்கப்பட்டது திருநெல்வேலி பொதுச்சந்தை

யாழ்ப்பாணம்,ஏப்.12

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்த திருநெல்வேலி பொதுச்சந்தை, கடைத் தொகுதி என்பன இரண்டு வாரங்களுக்குப் பின்னர் நேற்று மீளத் திறக்கப்பட்டன.

திருநெல்வேலி பொதுச் சந்தை, கடைத் தொகுதி என்பன கடந்த வாரம் மூடப்பட்டு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும், அவர்களிடம் இரு முறை பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களின் கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகளை நேற்று முதல் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஒத்துழைக்காத கடை உரிமையாளர்களின் கடைகளைத் திறக்க அனுமதிக்க முடியாது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# வெடுக்குநாறி, உருத்திரபுரீஸ்வரர் ஆலயங்களுக்கு இராஜாங்க அமைச்சர் விதுர விரைவில் விஜயம்

கொழும்பு,ஏப்.12

வவுனியா வெடுக்குநாறி மற்றும் கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயங்களுக்கு தேசிய மரபுரிமைகள், அருங் கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க விரைவில் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சித்திரைப் புத்தாண்டின் பின்னர் இந்த விஜயத்தை அவர் மேற்கொள்ளவுள்ளதாகவும், இதன்போது இந்த ஆலயங்களில் காணப்படும் பிரச்னைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முல்லைத்தீவு குருந்தூர் மலையை அண்மித்து 400 ஏக்கர் பகுதியை தொல்பொருள் செயல்பாடுகளுக்காக பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளையும் நிறுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற தொல்பொருள் அகழ்வாராச்சியின் போது வடக்கு - கிழக்கில் ஏற்படுகின்ற பிரச்னைகள் தொடர்பிலான கலந்துரையாடல் தொல்பொருள் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது, முல்லைத்தீவு குருந்தூர் மலையை அண்மித்து 400 ஏக்கர் காணியை கையகப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையை நிறுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அத்துடன் ஆரம்பத்தில் 72 ஏக்கரே அப்பகுதியில் காணப்பட்டதென்றும் 400 ஏக்கரைப் பெற்றுக்கொள்ளுதல் பொருத்தமற்ற செயலாகும் என்றும் எடுத்துக்கூறப்பட்டது.



இதனையடுத்து இராஜாங்க அமைச்சரும் அதிகாரிகளும் 400 ஏக்கரைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை நிறுத்தப்படுவதாக அறிவித்தனர்.

அதற்கு அடுத்தபடியாக, கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் தொல்பொருள் அகழ்வாராச்சி தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டது. இதன்போது தொல்பொருள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் குறித்த கோவிலின் உள்ளே தொல்பொருள் சான்றுகள் இருப்பதாகவும் அதனை ஆராய்ச்சிக்கு உட்படுத்தாது போய்விட்டால் சான்றாதாரங்கள் அழிந்துவிடும் என்றும் கூறினார்.

எனினும், இந்த ஆலயத்தின் வரலாற்றுக் காலத்து விடயங்களையும் முன்வைத்ததோடு இராஜாங்க அமைச்சர் அங்கு நேரடியாக விஜயம் செய்தால் நிலைமைகளை உணரமுடியும் என்று அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கு அவரும் சமிக்ஞையொன்றைக் காட்டியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து, வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆலயம் தொடர்பில் பேசப்பட்டது.

அதுதொடர்பில் நீதிமன்றம் இடைகாலத் தடை உத்தரவுகளை விதித்துள்ள நிலையில் எதிர்வரும் சித்திரைப் பௌர்ணமி தினத்திற்கு பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றில் வழக்கு உள்ளமையால் அதிகாரிகள் தரப்பில் எவ்வித மான உத்தரவாதங்களும் வழங்கப்படவில்லை.

எனினும் அப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்ய வேண்டும். அதன் ஊடாக நிலைமைகளை உணர்ந்து கொள்ள முடியும் என்றும் எடுத்துரைக்கப்படவும் இராஜாங்க அமைச்சர் அதற்கு உதவுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நிலாவரைக் கிணறு சம்பந்தமாகவும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டதோடு முன் அனுமதி பெறாது தொல்லியல் துறை அதிகாரிகளின் பிரவேசங்களை நிறுத்துவதன் ஊடாக முரண்பாடுகளை குறைக்கலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ)

# சிறுபான்மை சமூகங்களின் உரித்துக்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம்

## பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.12

சிறுபான்மை சமூகங்களின் உரித்துக்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் என்று இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) முஹம்மது சாத் கட்டாக் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாடும் தனது ஆட்புல எல்லைக்குள் சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமான விடயமாகும். இதனை ஏனைய நாடுகள் உணர்ந்து கொண்டு மதிப்பளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், புவிசார் மூலோபாய, புவிசார் அரசியல் மற்றும் புவிசார் பொருளாதார வளங்களின் காரணமாக உலக வல்லாதிக்க சக்திகளுடைய நலன்களின் மோதுகையே இலங்கை இலக்கு வைக்கப்படுவதற்கு காரணமாகும் என்றும் அவர் கூறினார். மேலும், அனைத்து ஜனநாயக நாடுகளிலும், சிறுபான்மைச் சமூகங்களின் உரித்துக்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவற்றின் தனித்துவ கலாசார விடயங்களை சுதந்திரமாகப் பின்பற்றுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# போதைப்பொருள்களுடன் வத்தளையில் ஒருவர் கைது

கொழும்பு,ஏப்.12

போதைப்பொருள்கள் மற்றும் அதன் மூலம் சம்பாதித்த 10 இலட்சத்து 30,670 ரூபாவுக்கு அதிகமான பணத்துடன் வத்தளை பகுதியில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை ரயில் பாதைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இதன்போது, குறித்த நபரிடமிருந்து 101 கிராம் ஹெரோயின், 113 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 10 இலட்சத்து 30,670 ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

வத்தளை பகுதியைச் சேர்ந்த 34 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் ஒருநாள் தொற்று ஒன்றரை இலட்சத்தை கடந்தது!

இந்தியாவில் ஒரே நாளில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட நாளாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை வரையான 24 மணி நேரம் அமைந்துள்ளது.

இதன்படி, இந்த ஒருநாளில் மட்டும் ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 879 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனால், அந்த நாட்டின் மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும் ஒரு கோடியே 33 இலட்சத்தைக் கடந்துள்ளது.

இதேவேளை, நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 839 பேர் தொற்றால் உயிரிழந்தனர். இதுவரை, இந்தியாவில் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் இதுவே உச்சமாகும். (ஐ)



# மனிதர்களின் இரைச்சலால் கடல் உயிரினங்களுக்கு பாதிப்பு

## ஆய்வில் தகவல்

நியூயோர்க், ஏப். 12

உலக வெப்பமயமாதல், பருவநிலை மாற்றம் உள்ளிட்டவற்றை பற்றி சர்வதேச சமூகம் கவலைப்பட்டு கொண்டிருக்கிறது. ஆனால், மனிதர்கள் ஏற்படுத்தும் இரைச்சல் பெருங்கடலின் இயற்கை சூழலையே மாற்றியமைக்கிறது. பல ஆச்சரியங்களை கொண்டுள்ள கடலில் வாழக் கூடிய பாலூட்டிகள், மீன்கள் உள்ளிட்ட 80 சதவீத உயிரினங்களில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

ஒலி அலைகள் நீரில் வேகமாக பயணிக்கின்றன. கடலில் வாழும் உயிரினங்கள் ஒலியை பயன்படுத்தி, தொடர்பு கொள்ளுதல், இடம்பெயர்தல், வேட்டையாடுதல், ஒளிந்து கொள்ளல் மற்றும் இனப்பெருக்கம் ஆகியவற்றில் ஈடுபடுகின்றன.

ஆனால், தொழில்புரட்சி ஏற்பட்ட பின்னர், தொழில் சாலைகள் பெருகின. நீருக்குள் பல விடயங்களை மனிதர்கள் அறிமுகப்படுத்தினர். கப்பல்கள், எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கான தேடுதலுக்காக நில நடுக்கம் சார்ந்த அளவீடுகள், சமுத்திர பகுதியில் சோனார் மேப்பிங், கடலோர கட்டுமான பணிகள் மற்றும் காற்றாலைகள் ஆகியவை உருவாக்கப்பட்டன.

எனினும், பெருங்கடலின் நலம் பற்றிய சர்வதேச அளவிலான ஆய்வுகளில் இரைச்சல் தொடர்ந்து கண்டு கொள்ளப்படவே இல்லை.

இதுபற்றி கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த சூழலில் இருந்து முறையாக ஆய்வு நடத்தப்பட்டது. அதில், சிறிய வகை இறால்களில் இருந்து பெரிய சுறாக்கள் வரை கடல்வாழ் உயிரினங்கள் மனிதர்களின் இரைச்சலால் பெருமளவில் பாதிக்கப்பட்டு பெருங்கடலின் இயற்கை அமைப்பு மாற்றியமைக்கப்பட்டு உள்ளது என்று தெரிய வந்துள்ளது.

இந்த ஆய்வு முடிவின்படி, 90 சதவீதம் அளவுக்கு பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன. அவற்றில் மீன்கள் மற்றும் ஜெல்லி மீன்கள் போன்ற முதுகெலும்பில்லாத உயிரினங்களில் 80 சதவீதம் அளவுக்கு பாதிப்புகளை சந்தித்துள்ளன. எனினும், கடல்வாழ் பறவையினங்கள் மற்றும் கடல் ஆமைகள் ஆகியவற்றில் எவ்வித பாதிப்புகளையும் ஏற்படுத்தவில்லை. எனினும், இது இன்னும் தெளிவாக அறியப்படவில்லை.

ஒலி மாசு, பல கடல்வாழ் உயிரினங்களின் இயற்கை வாழ்விடங்களில் இருந்து அவற்றை வெளியேற்றி உள்ளன என்றும் அந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# மியன்மார் படைகளால் ஒரேநாளில் 80இற்கும் மேற்பட்டோர் படுகொலை!

## உடல்களையும் இராணுவம் கைப்பற்றியது

யங்கூன், ஏப். 12

மியன்மாரின் பாகோ நகரில் இடம்பெற்ற போராட்டத்தில் ஒரே நாளில் 80இற்கும் மேற்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அந்த நாட்டின் சுயாதீன ஊடகங்கள் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுக்கும் ஏ.ஏ.பி.பி. அமைப்பு என்பன தெரிவித்துள்ளன.

கொல்லப்பட்டவர்களின் உடல்களை இராணுவம் எடுத்துச் சென்றுள்ளது. இதனால், உண்மையான இறப்புகளின் எண்ணிக்கையை துல்லியமாக கூறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், ஜனநாயகப் போராட்டக்காரர்களுக்கு எதிராக இராணுவத்தினர் கனரக ஆயுதங்களை பயன்படுத்துகின்றனர் என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் பெப்ரவரி ஆட்சி கவிழ்ப்பின் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட 600இற்கும் மேற்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.

தலைநகர் யங்கூனுக்கு அருகில் உள்ள பாகோவில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் கொலைகள் அரங்கேறியுள்ளன என்று



கூறப்படுகின்றது. மேலும், கடந்த மார்ச் 14ஆம் திகதி யங்கூனில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். இதன் பின்னர், இடம்பெற்ற அதிகளவான படுகொலைச் சம்பவமாக இது பதிவாகியுள்ளது. இதே நேரம் மியான்மர் நவ் செய்தித் தளமும் 82 பேர் கொல்லப்பட்டனர் என்று கூறியுள்ளது.

பிரிட்டனிடமிருந்து 1948ஆம் ஆண்டு மியன்மார் சுதந்திரமடைந்தது. அதன் நவீன வரலாற்றில் அதிக காலம் இராணுவ ஆட்சியின் கீழ் இருந்த அந்த நாடு, 2010ஆம் ஆண்டு முதல் கட்டுப்பாடுகள் இராணுவ ஆட்சியின் கட்டுப்பாடுகள் தளர ஆரம்பித்தன. இது 2015 சுதந்திர தேர்தலுக்கு வழிவகுத்தது. மூத்த அரசியல்வாதி ஆங் சான் சூகியின் கட்சி வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து இந்த ஆண்டு நடந்த தேர்தலிலும் சூகியின் கட்சியே வெற்றி பெற்றது. ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் முன்னதாக இராணுவம் அதிகாரத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோமகன் பிலிப் இறுதிசடங்கில் பிரதமர் பொறிஸ் பங்கேற்கார்!

லண்டன், ஏப். 12



பிரிடிஷ் மகாராணியின் கணவரான இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்கில் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் பங்கேற்க மாட்டார் என்று டவுனிங் ஸ்ட்ரீட் அறிவித்துள்ளது.

பிரிட்டனின் கொரோனா வைரஸ் விதிமுறைகளின் கீழ் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை விண்ட்ஸர் கோட்டையில் கோமகன் பிலிப்பின் இறுதி சடங்கு இடம்பெறுகிறது. இந்த நிகழ்வில் 30 பேர் மட்டும் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.இதில், இளவரசர் பிலிப்பின் மனைவி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் மற்றும் மிக நெருக்கிய குடும்பத்தினர் மாத்திரம் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"பிரதமர் அரச குடும்பத்திற்கு ஏற்றவாறு செயல்பட விரும்புகிறார், எனவே முடிந்தவரை பல குடும்ப உறுப்பினர்களை அனுமதிக்க சனிக்கிழமை இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள மாட்டார்" என்று செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

இளவரசர் பிலிப்புக்கு மரியாதை செலுத்தும் அடையாளமாக எட்டு நாட்கள் தேசிய துக்கம் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொரோனா தொற்றிலிருந்து தப்ப விதிகளை பின்பற்றுவதே ஒரேவழி!

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

புதுடில்லி, ஏப். 12

கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்த காலத்துக்கு பொருத்தமான விதிமுறைகளை அனைவரும் பின்பற்றுவதுதான் சிறந்த வழி என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்காசிய பிராந்திய பணிப்பாளர் டாக்டர் பூனம் கேத்ரபால் சிங் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனாவை கட்டுப்படுத்த பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் தொடர்புதடம் அறிதலை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். நோயாளர்களைக் கண்டறிந்து, தனிமைப்படுத்துவதற்கான செயல்திட்டங்களை மேம்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து தங்களையும் சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள சுகாதார வழிகாட்டல்களை ஒவ்வொருவரும் சிறப்பாகப் பின்பற்ற வேண்டும். பொதுமக்கள் இருமும் போதும் - தும்மும் போதும் வெளிப்படும் துளிகள் மற்றவர்கள் மீது படாத வகையில் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். கைகளை அடிக்கடி சுத்திகரித்துப் பராமரிக்க வேண்டும். தனிமனித இடைவெளியை தவறாமல் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தனி மனித இடைவெளியை பின்பற்றுவதும், போக்குவரத்து கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பதும் கொரோனா பரவலை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் வழி வகுக்கும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# அலிபாபா நிறுவனத்துக்கு ரூ. 52 ஆயிரம் கோடி அபராதம்

பீஜிங், ஏப். 12



போட்டி நிறுவனங்களை அழிக்க முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டி அலிபாபா நிறுவனத்துக்கு 52 ஆயிரம் கோடி ரூபாவை அபராதமாக விதித்துள்ள சீன அரசாங்கம்.

சீனாவை சேர்ந்த முன்னணி இணைய வர்த்தக நிறுவனமாக அலிபாபா உள்ளது. இதன் நிறுவுநராக ஜாக் மா உள்ளார். 1999 ஆம் ஆண்டு ஆரம்பமான இந்த வர்த்தக நிறுவனம் சீனாவின் வர்த்தக உலகத்தையே புரட்டிப் போட்டது.

பல ஆயிரம் கோடிகளில் இலாபம் ஈட்டி வந்த இந்த நிறுவனத்துக்கு கடந்த ஒக்ரோபர் மாதம் சிக்கல் ஆரம்பித்தது. நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற ஜாக் மா சீனாவின் அதிகார அமைப்புகளை விமர்சித்தார். இதையடுத்து அந்த நிறுவனத்தின் மீது அடக்குமுறைகளை அரசு கட்டவிழ்த்து விட்டது.

இதையடுத்து சுமார், இரு மாதங்களாக வெளியுலகுக்கு வராத ஜாக் மா, பின்னர் ஒரு நிகழ்வில் பங்கேற்று சீன அரசு தொடர்பான தனது விமர்சன கருத்துகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

எனினும், அலிபாபா நிறுவனம் போட்டி நிறுவனங்களை அழிக்க முனைந்தது என்று கூறி சந்தைகளுக்கான ஒழுங்குமுறை ஆணையம் விசாரணையில் ஈடுபட்டது. இதில், அலிபாபா நிறுவனத்தை குற்றவாளியாக இனங்கண்டு 280 கோடி அமெரிக்க டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 52 ஆயிரத்து 310 கோடி ரூபாவை அபராதமாக விதித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மணல் கடத்திய 25 பேர் பொலிஸாரிடம் சிக்கினர்!

## *25 வாகனங்களும் பறிமுதல்*

மட்டக்களப்பு, ஏப்.12

**மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் பல்வேறு இடங்களில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த 25 பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் இதற்காகக் பயன்படுத்தப்பட்ட 25 வாகனங்களும் நேற்று கைப்பற்றப்பட்டன என்று வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.**



வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாகனேரி, பொத்தானை, புலிபாய்ந்தகல், ஒமடியாமடு, ஊத்துச்சேனை, வெள்ளாமைச்சேனை, மற்றும் புனாணை ஆகிய பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றப்படுவதாக வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைத்த வாழைச்சேனை பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து நடத்திய நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 16 உழவு இயந்திரங்கள், 7 டிப்பர்கள், 2 லொறிகள் என 25 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், இவற்றை செலுத்தி வந்த வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமாக மணல், மரங்கள் கடத்தல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்த விசேட பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# திருமண நிகழ்வுக்காக வந்த வான் ரயர் வெடித்து தடம்புரண்டு விபத்து!

மட்டக்களப்பு, ஏப். 12

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் கடவத்தமடு பிரதேசத்தில் வான் ஒன்று ரயர் வெடித்து குடைசாய்ந்ததில் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்தார் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பில் இருந்து சம்மாந்துறை பிரதேசத்திற்கு திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக பயணித்தவர்களின் வானின் ரயர் வெடித்தே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது வாகனம் வீதியிலிருந்து அருகிலுள்ள வயலுக்குள் பாய்ந்து குடை சாய்ந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)




# கோறளைப்பற்று மத்திக்கான எல்லைநிர்ணயம் நூல் வெளியீடு

மட்டக்களப்பு, ஏப். 12

எஸ்.எச். புர்ஹானுதீன் எழுதிய "வாழைச்சேனை கோறளைப்பற்று மத்திக்கான எல்லை நிர்ணயம் மற்றும் புதிய கிராம சேவகர் பிரிவுகளை உருவாக்குவதற்கான முன்மொழிவு" செய்யப்பட்ட புத்தக வெளியீட்டு விழா வாழைச்சேனை அந் நூர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

மௌலவி யூ.எல்.எம்.நளீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வுபெற்ற பிரதி கல்வி பணிப்பாளர் எம்.ரீ.எம்.அஸ்ரப் கலந்து கொண்டதுடன் நூல் விமர்சனத்தை கவிஞர் யூ.எல்.எம்.ஹரீஸ் நடத்தினார். அத்துடன் நூலின் ஆய்வை நூலாசியர் எஸ்.எச். புர்ஹானுதீன் நடாத்தியதுடன் நன்றி உரையினை ஹாபீஸ் என்.எம்.எம்.சியாம் நடத்தினார். வாழைச்சேனை மெஸ்ரோ அமைப்பின் வெளியீடாக வெளியிடப்பட்ட புத்தக வெளியீட்டு விழாவில் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் பள்ளிவாசல் நிருவாகிகள் ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# கால்வாயிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

அக்கரைப்பற்று, ஏப். 12

கால்வாய் ஒன்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலத்தை சம்மாந்துறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் பிரகாரம் நேற்று மீட்கப்பட்ட இந்தச் சடலம், சுமார் 40 முதல் 45 வரையிலான வயது மதிக்கத்தக்கவருடையது எனத் தெரிவித்த பொலிஸார், இந்நபர் கொலை செய்யப்பட்டு சடலமாக போடப்பட்டுள்ளாரா அல்லது இது இயற்கை மரணமா என விசாரணை ஆரம்பித்துள்ளனர்.

தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து மேலும், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)



# அனைத்து முகாமைத்துவ சேவை தொழில்சங்கத்தின் முப்பெரும் விழா!

அக்கரைப்பற்று, ஏப். 12

அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் முப்பெரும் விழாவில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தகுதி பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பிள்ளைகளையும், சேவையிலிருந்து ஓய்வு பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களையும் பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்களையும், பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வானது நேற்று ஞாயிற்றுக்கிழமை அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.

அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ.ஜி.முபாரக் தலைமையில் அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியின் பிரதான ஆராதனை மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு அதிதிகளாக அக்கரைப்பற்று வலயக் கல்வி பணிப்பாளர் ஏ.எஸ்.எம். காசீம், அக்கரைப்பற்று வலயக் கல்வி பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) எம்.எம்.சித்தி பாத்திமா, அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியின் அதிபர் ஏ.எல்.ஹமுருதீன், சங்கத்தின் செயலாளர் நாயகம் வடிவேல் பற்குணன், சங்கத்தின் முன்னால் செயலாளர் நாயகம் என். ரமணீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில், அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் "முகை" விழா மலர் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், அதன் முதல் பிரதிகள் அதிதிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

(ஐ)

# குறிஞ்சாங்கேணி பாலம் நிர்மாண பணி ஆரம்பம்!

திருகோணமலை, ஏப். 12

திருகோணமலை - கிண்ணியா - குறிஞ்சாங்கேணி வீதியில் குறிஞ்சாங்கேணி களப்பு ஊடாக பாலம் அமைப்பதற்கான நிர்மாணப்பணிகள் நேற்று முன்தினம் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கு அமைய முன்னெடுக்கப்பட்டு வரும் பாலங்கள் நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த பாலத்தின் நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த பாலமானது கிண்ணியா பிரதேச சபை - கிண்ணியா நகர சபை பிரதேசத்தையும் இணைக்கும் வகையில் அமைகிறது. பிரதேச மக்கள் குறிஞ்சாங்கேணி மற்றும் கிண்ணியா இடையேயான போக்குவரத்துக்கு படகையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படுவதால் பின்னர் ஒரு இலட்சத்திற்கும் அதிக மக்கள் இதன் மூலம் பயன்பெறுவர் என்று கூறப்படுகின்றது. குறிஞ்சாங்கேணி களப்பின் ஊடாக நிர்மாணிக்கப்படும் இந்த பாலம் 120 மீற்றர் நீளமுடையதாகும். இதன் நிர்மாணப்பணிகளுக்காக 75 கோடி ரூபாய்செலவாகும்என்று கணிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றிலிருந்து குணமடைவு உயர் மட்டத்தில் இலங்கை

கொழும்பு,ஏப்.12

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி குணமடைவோரின் எண்ணிக்கை தொடர்ந்தும் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. தொற்றிலிருந்து குணமடைபவர்களின் வீதம் 96.52 ஆக காணப்படுகின்றது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.**

நாட்டில் தொற்றிலிருந்து இதுவரை குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 91 ஆயிரத்து 456 ஆகும்.

அதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருப்பவர்களின் எண்ணிக்கை 94 ஆயிரத்து 848 ஆகவுள்ளது. கொரோனா தொற்று காரணமாக நாட்டில் 595 பேர் உயிரிழந்தனர்.

தற்போது வைத்தியசாலைகளில் மருத்துவ சோதனையிலுள்ளவர்களின் எண்ணிக்கை 316 ஆகும். சிகிச்சை பெற்றுவருவோரின் எண்ணிக்கை 2 இரண்டாயிரத்து 797 ஆகும்.

நாட்டில் 9 இலட்சத்து 25 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஏற்றும் நடவடிக்கை எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (எ)



## நல்லிணக்க வழிமுறைகள் அமுல்படுத்தல் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை விளக்கம்

கொழும்பு,ஏப்.12

இலங்கையில் நல்லிணக்க வழிமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பான முன்னேற்றம் குறித்து இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விளக்கமளித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, கொழும்பைத் தளமாகக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் சிரேஷ்ட இராஜதந்திர பிரதிநிதிகளை வெளிவிவகார அமைச்சில் சந்தித்து, இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

அரசமைப்பு சீர்திருத்த செயல்முறை, ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்துதல் மற்றும் நல்லிணக்க வழிமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பான முன்னேற்றம் உள்ளிட்ட பல செயல்பாடுகள் குறித்து தூதுவர்களுக்கு அமைச்சர் விளக்கமளித்துள்ளார் என்று வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொரோனாவுக்கு பின்னரான சூழ்நிலையில், இலங்கையில் சுற்றுலா துறையைப் புதுப்பிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் தனிமைப்படுத்தல் தொடர்பான இலங்கை அரசின் சுகாதார வழிமுறைகள் குறித்தும் இதன் போது விவாதிக்கப்பட்டது.

பிரான்ஸின் தூதுவர் எரிக் லாவெர்ட், இத்தாலியின் தூதுவர் ரீட்டா மன்னெல்லா, ருமேனியா தூதுவர் விக்டர் சியுஜ்தியா அத்துடன் ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் துணைத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டர். (எ)

## முயற்சி செய்தால் முடியாது என்று ஒன்றுமில்லை

### ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

ஹற்றன்,ஏப்.12

ஆயிரம் ரூபாய் சம்பளத்தை பெற்றுத்தர முடியாது என்று பலர் தெரிவித்தனர். அதனைப் பெற்றுக்கொடுத்த பின் வேலை நாள்கள் குறைக்கப்படும் என்றார்கள் அதனையும் நிவர்த்தி செய்தவுடன் இன்று கூறுகிறார்கள். மேலதிக இறாத்தல் கொழுந்துக்காசு இல்லை என்று. எதனை செய்தாலும் அதில் குறை காண்பதில் தான் இந்தச் சமூகம் உள்ளது.

ஆனால், முயற்சி செய்தால் முடியாது என்று ஒன்று மில்லை. என்பதனை இந்த ஆயிரம் ரூபா சம்பளத்தின் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளோம் என தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட டயகம சௌமியமூர்த்தி கல்லூரியில் இரண்டு திறன்விருத்தி வகுப்பறைகளை மாணவர்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# சர்ச்சைக்குரிய எண்ணெய் விற்பனை செய்யப்படவில்லை

### லசந்த அழகியவன்ன கூறுகிறார்

கொழும்பு,ஏப்.12

புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் அடங்கிய தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்படவில்லை. சேகரிக்கப்பட்ட 109 தேங்காய் எண்ணெய் மாதிரிகளின் ஊடாக சுகாதாரத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டது என கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல், அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தினருடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் அப்லாடொக்சின் பதார்த்தம் கலக்கப்பட்டமை இருவேறுபட்ட விஞ்ஞான ஆய்வுகளின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டன. இந்தத் தேங்காய் எண்ணெய் கொள்கலன்கள் சுங்கத் திணைக்களத்தால் குறித்த நிறுவனத்தின் களஞ்சியசாலையில் சேமித்து வைக்கப்பட்டன.

அப்லாடொக்சின் பதார்த்



தம் கலக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக எதிர்த்தரப்பினர் போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். 25 மாவட்டங்களிலும் உள்ள பிரதான எண்ணெய் விநியோக மையங்களிலிருந்து 125 தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இவற்றில் 109 மாதிரிகளில் அப்லாடொக்சின் பதார்த்தம் கலக்கப்படவில்லை என்பது பரிசோதனை ஊடாக உறுதிப்படுத்தப்பட்டன. இதன் அறிக்கை தேசிய நுகர்வோர் அதிகார சபைக்கும், தெங்கு உற்பத்தி அதிகார சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. ஆகவே, பொது மக்கள் தேங்காய் எண்ணெயை அச்சமின்றி கொள்வனவு செய்யலாம்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையை 800 ரூபாவால் அதிகரிக்க கோரிக்கை முன்வைக்கப்பட்டது. கோழி இறைச்சியின் விற்பனை விலை குறித்து 2020 ஆம் ஆண்டு விஷேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. சோளம் உற்பத்தியின் வீழ்ச்சியால் சோளத்தின் விலை அதிகரிக்கப்பட்டது. இதனால் கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் உற்பத்தி மட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 430 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும். என்பதில் எவ்வித மாற்றமும் கிடையாது. கோழி இறைச்சி பிரதான நிலை உற்பத்தியாளர்கள் விற்பனை இடைத்தரகர்களுக்கு 375 ரூபாய்க்கு கோழி இறைச்சியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர். ஆகவே கோழி இறைச்சியின் விற்பனை விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

27 அத்தியாவசிய உணவுப் பொருள்களின் நிர்ணய விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலைக்கு மேலதிகமாக அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் தொடர்பில் பொதுமக்கள் நுகர்வோர் அதிகார சபைக்கு முறையிடலாம்- என்றார். (எ)

## மரணஅறிவித்தல்

மலர்வு
13 - 06 - 1942



உதிர்வு
10 - 04 - 2021

**திருமதி பிரியதர்சினி ஈஸ்வரானந்தன்**

மன்னாரைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரியதர்சினி ஈஸ்வரானந் தன் நேற்று (10.04.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் டெய்சி தம்பதியரின் ஏகபுதல்வியும், காலஞ்சென்றவர்களான சம்பந்தர், பாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஈஸ்வரானந்தனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் நகுலேஸ்வரியின் மைத்துனியும், காலஞ்சென்ற விக்கினராஜா (விக்கி) மற்றும் தயாளினி (தயா-USA), மகிந்தன் (பனை அபிவிருத்திச்சபை, யாழ்ப்பாணம்), மகேந்திரன் (கண்ணா- கொமேர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்), ஜனகன் (ஜனா- பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகுதாயாரும்,உதயதாஸ் (USA), ஹம்சா (நெல்லியடிமத்தியகல்லூரி ஆசிரியை), ஜமுனா (ஆசிரியை- வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமி யும், லக்சிகா, கம்சிகா, ஜஜானி,அபிநயா, கேசரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமைபி.ப 01:00 மணியளவில் அன்னாரின் நாவலர் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

528,நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு
0775018189 , 0773905115 , 0776304334

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu



## சென்னையின் டோனிக்கு ரூ. 30 இலட்சம் அபராதம்!

சென்னை, ஏப். 12

சென்னை அணியின் தலைவர் டோனிக்கு 12 இலட்சம் இந்திய ரூபா - நம் நாட்டு மதிப்பில் சுமார் 30 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் தாமதமாக பந்து வீசியமைக் காகவே ஐ.பி.எல். நிர்வாகம் சென்னை அணியின் தலைவருக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆஷ்லே பார்டி அதிர்ச்சி தோல்வி



நியூயோர்க், ஏப். 12

சார்ல்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸின் காலிறுதியில் உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டி தோல்வியடைந்தார். அமெரிக்காவில் சார்ல்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில், நேற்று நடந்த ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டியை ஸ்பெயினின் பௌலா படோஸா எதிர்கொண்டார்.

விறுவிறுப்பாக ஆரம்பமான இந்தப் போட்டியில், 6 -4 , 6 - 3 என்ற செற் கணக்கில் பௌலா வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். கடந்த 4 போட்டிகளில் அரையிறுதி ஆட்டத்துக்கு பௌலா முன்னேறியது இது இரண்டாவது சந்தர்ப்பமாகும். (ஐ)



# பரபரப்பான போட்டியில் கொல்கத்தா அணி வெற்றி!

சென்னை, ஏப். 12

பரபரப்பாக நீடித்த ஆட்டத்தில் 10 ஓட்டங்களால் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி.

ஐ.பி.எல். இருபது - 20 போட்டியின் 14ஆவது தொடர் இந்தியாவில் தற்போது நடக்கிறது. இதில் நேற்று சென்னையில் நடந்த ஆட்டத்தில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ், ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியின் தலைவர் வோர்ணர் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடியது கொல்கத்தா அணி. நிதிஷ் ராணா, ஷுப்மன் கில் இணை தொடக்கம் கொடுத்தது. இந்த இணை ஓரளவுக்க சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தியது. ஒரு பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் 15 ஓட்டங்களை எடுத்த நிலையில் கில் ஆட்டமிழந்தாலும் முதல் விக்கெட்டுக்காக இருவரும் 53 ஓட்டங்களை சேர்த்திருந்தனர்.

அடுத்து வந்த ராகுல் திரிபாதி ராணாவுடன் இணைந்து அதிரடி காட்டினார். இருவரும் இணைந்து இணைப்பாட்டமாக 93 ஓட்டங்களை விளாசினர். 29 பந்துகளை சந்தித்த திரிபாதி 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விளாசி 53 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அந்ரே ரஷல் ஒரு பௌண்ட்ரியுடன் 5 ஓட்டங்களை எடுத்த நிலையில் ரஷீத் கானின் பந்தில் பண்டேயிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து, 9 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை விளாசி 80 ஓட்டங்களை குவித்த ராணா ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் ஆட்டம் மந்த கதியடைந்தது. இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 187 ஓட்டங்களை குவித்தது கொல்கத்தா அணி.

தினேஷ் கார்த்திக் ஒரு சிக்ஸர், 2 பௌண்ட்ரிகளுடன் 9 பந்துகளில் 22 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியின் பந்துவீச்சில் முஹமட் நபி, ரஷீத் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணிக்கு ரித்திமன் சஹா, டேவிட் வோர்ணர் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். வோர்ணர் 3 ஓட்டங்களுடனும், சஹா 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த மனிஷ் பண்டே, ஜொன்னி பெயர்ஸ்ரோ ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை ஆரம்பித்தனர். பெயர்ஸ்ரோ 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 55 ஓட்டங்களுடன் கம்மின்ஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்கள் சோபிக்காத நிலையில் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 177 ஓட்டங்களையே ஹைதராபாத் அணி பெற்றது. இதனால் கொல்கத்தா அணி 10 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இறுதியில், மனிஷ் பண்டே மட்டும் 2 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 61 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கொல்கத்தாவின் பந்துவீச்சில் பிரஷித் கிருஷ்ணா 2 விக்கெட்களையும், சகீப் அல் ஹசன், பட் கம்மின்ஸ், அந்ரே ரஷல் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக கொல்கத்தா அணிக்காக 80 ஓட்டங்களை குவித்த நிதிஷ் ராணா தெரிவு செய்யப்பட்டார். (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ



**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா-வாராந்த சினிமா தகவல்கள்

**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நலந்தானா



10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**ஐ ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான கொடியேற்றம்
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலண்டேசுவரர் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான கொடியேற்றம்

**CHANNEL HOLY MARY**

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org